விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 23 வெள்ளிக்கிழமை (08.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 201

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தமிழருக்கான அரசியல் தீர்வை இழுத்தடிக்க அரசாங்கம் முயற்சி

## மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக தமிழ்மக்களின் அரசியல் தீர்வை அரசாங்கம் இழுத்தடிக்க முயற்சிக்கின்றது. வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய தெரிவுக் குழுவோ சர்வ கட்சிக் குழுவோ நிபுணர் குழுவோ அவசியமில்லை என்று ஜே.வி.பி. குறிப்பிட்டுள்ளது.

13 வது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்று அதிகாரங்களை வழங்க அரசாங்கம் ஏற்கெனவே இந்தியாவிற்கும் ஏனைய சில சர்வ தேச நாடுகளுக்கும் வாக்குறுதியளித்துள்ளது. ஆனால் தற்போது நாட்டு மக்களை ஏமாற்ற தெரிவுக்குழு வேஷத்தை அரசு போட்டுள்ளது என்று அக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழறிஞர் சிவத்தம்பி மறைவுக்கு கலைஞர் கருணாநிதி இரங்கல்

(சென்னை)

தமிழ் அறிஞர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி மறைவுக்கு தி.மு.க தலைவர் கருணாநிதி, ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் மறைவு செய்தி அதிர்ச்சியை தந்தது. 79 வயதான பேராசிரியர் சிவத்தம்பி கடந்த நில நாட்களாகவே உடல் நலிவுற்றிருந்து நேற்றுமுன்தினம் மறைந்திருக்கிறார்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி தமிழ்மொழி, இலக்கியத்தில் ஆழ்ந்த புலமை கொண்டவர். திறனாய்வாளர், சமூகவியலாளர், அரசியல் சிந்தனையாளர், பல்துறை புலமை கொண்டவர்.

இங்கிலாந்து, பின்லாந்து, ஜேர்மனி என்று பல நாடுகளிலும் (20ஆம் பக்கம் பார்க்க)




தமிழ் பேரறிஞர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் பூதவுடல் தெஹிவளையிலுள்ள அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையானோர் அவருக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள அவரது பூதவுடலை படத்தில் காணலாம்.

## ஐ.தே.கவின் மனு நிராகரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஐக்கிய தேசியக் கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரத்ன தாக்கல் செய்த வழக்கிற்கு எதிராக ஐ.தே.கவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று மாவட்ட நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தென்மாகாண சபை (20ஆம் பக்கம் பார்க்க)

## சமஷ்டி முறையிலான தீர்வைப் பெற போராட்டத்தை முன்னெடுக்கவும் தயார்

### நாடாளுமன்றத்தில் சம்பந்தன் பேச்சு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றை வழங்க அரசாங்கம் தவறுமானால் போராட்டங்களை முன்னெடுக்கவும் தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் நாடாளு மன்றத்தில் தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கும் அரசுக்குமிடையிலான பேச்சுவார்த்தையின் 8ஆம் கட்டப் பேச்சு நேற்று இடம்பெற்றது. ஏற்கனவே இடம்பெற்ற பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டபடி இனப்பிரச்சனையின் தீர்வு தொடர்பாக எழுத்து மூல பதிலை தருமாறு கூட்ட மைப்பு கேட்டு வருகின்றது. ஆனாலும் நேற்றைய பேச்சுகளிலும்அதனை அரசு வழங்காத நிலையிலேயே சம்பந்தன் நாடாளுமன்றத்தில் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தனது பேச்சில் மேலும் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவை சந்தித்துப் பேசுமாறு இலங்கை உயர்ஸ்தானிகருக்கு அழுத்தம்

(கொழும்பு)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திக்குமாறு இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசத்தை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான உறவுகள் குறித்து தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா முழு உணர்வுள்ளவராக இருப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்ததைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் இச்சந்திப்பை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

அடுத்த வாரம் இவ்விருவருக்குமிடையிலான சந்திப்பு இடம்பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் (20ஆம் பக்கம் பார்க்க)

## கே.பி.புனர்வாழ்வு பெற்றுவிட்டார் அமைச்சர் கெஹலிய அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச ஆயுதக் கொள்வனவாளரும் தற்போது அரச தரப்பில் உள்ளவருமான கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் புனர்வாழ்வு பெற்றுவிட்டார் என ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்து (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பேராசிரியர் சிவத்தம்பியின் மறைவு தமிழுக்கும் தமிழருக்கும் பேரிழப்பு

## அமைச்சர் டக்ளஸ் இரங்கல்

தமிழின் செழுமைக்கும் அதன் பல்துறை சார்ந்த காத்திரமான வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் உறுதுணையாக இருந்து உழைத்த பெருந்தகை பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி மறைவு தமிழுக்கும் உலகளாவிய தமிழர்களுக்கும் பேரிழப்பாகும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில்,

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி மறைவு கேட்டு பெரிதும் கவலையடைந்துள்ளேன். அன்னாரது இழப்பு ஈடுசெய்யஇயலாத பேரிழப்பாகும். பேராசிரியர் அமரர் கைலாசபதி அவர்களது காலத்தில் தமிழ் கலை இலக்கியத் திறனாய்வுத்துறையில் சமபங்களிப்பினை நல்கி வந்துள்ளார். பேராசிரியர் கைலாசபதியின் மறைவுக்குப் பின் தனித்து நின்ற ஒருவராக அப்பணியை செவ்வனே முன்னெடுத்து வந்தவர் என்பதில் சந்தேகமில்லை.

மார்க்ஸிய சிந்தனையினை உள்வாங்கிக் கொண்டவராயினும் தனது சுயசிந்தனைத் திறனின் உதவியுடன் சிறந்த தேடல்களைக் கொண்ட உயரிய வெளிப்பாடுகளான பேராசிரியர் சிவத்தம்பி திறனாய்வுகள் தமிழின் வளர்ச்சிக்கும் அதனூடாகப் பிறமொழிகளின் தேடல்களினுடான வளர்ச்சிக்கும் வழங்கியுள்ள பங்களிப்புக்கள் ஏராளம்.

எந்தத் தலைமுறையையும் மதித்து, வரவேற்கும் போக்கும் அன்பாகப் பழகும் விதமும், குழந்தை மனமும் கொண்ட பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் எமது தமிழர் போராட்டம் ஆரம்பித்த காலம் முதலே என்னுடன் தனிப்பட்ட முறையில் நெருக்கிய தொடர்பினைப் பேணி வந்தவர். பல்வேறு விடயங்கள் தொடர்பில் அடிக்கடி நான் அவரிடம் கலந்துரையாடுவது உண்டு. அந்த வகையில் அன்னாரது இழப்பு எனக்கு பேரிழப்பாகும்.

எவராலும் நிரப்ப இயலாத ஓர் இடத்தை வெறுமையாக்கி விட்டு பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தமிழ் உலகை விட்டும் இந்த உலகை விட்டும் விடைபெற்றுக்கொண்டார் எனும்போது வேதனையே மிஞ்சுகின்றது என்றுள்ளது.

## கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் கலாசாரப் பிரிவால் எதிர்வரும் 30ஆம் திகதி அன்று நடைபெறவிருந்த கட்டுரைப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் மறுநாள் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என யாழ்.மாநகர சபையின் கலாசாரப் பிரிவு அறிவித்துள்ளது. (எ)

# உறவினர் வீடுகளில் தங்கியிருப்போர் நாளை மீள்குடியமர்த்தப்படுவர்

## வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் அறிவிப்பு

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த இடம்பெயர்ந்து வாழும் உறவினர், நண்பர்கள், வீடுகளில் தங்கியிருக்கும் மக்களுக்கான மீள்குடியேற்றம் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

மீள்குடியேற வரும் குடும்பங்கள் தற்போது வதியும் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து பதிவு நீக்கல் கடிதங்களைப் பெற்றுக்கொண்டு வரவேண்டும் என உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் தெரிவித்தார். (எ-8)

# வெளிவிவகார அமைச்சின் நடமாடும் சேவை வன்னியில்

வெளிவிவகார அமைச்சின் நடமாடும் சேவை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவை 13ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் 14ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும் காலை 9 மணி முதல் மாலை 3.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதன்போது பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களை உறுதிப்படுத்தல், வெளிநாடு செல்வதற்காக பொலிஸ் நற்சான்றிதழ் வழங்கல், வெளிநாட்டில் பிறந்த இலங்கை குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கல் போன்ற பல சேவைகள் இடம்பெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமல் பெரேரா இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். (எ)

# கோண்டாவிலில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கொட்டைக்காட்டு லேனில் உள்ள வீடொன்றிலிருந்து சுமார் 20 பவுண் பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது

வீட்டில் ஆட்கள் இல்லாத சமயம் பார்த்து இத் திருட்டுச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

காலை 10 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு சென்றதாகவும் மாலை 7 மணிக்கு வீட்டுக்கு திரும்பிச் சென்ற போது வீடு உடைக்கப்பட்டு அங்கிருந்த நகைகள் திருட்டுப் போனமை தெரிய வந்ததாகவும் பொலிஸாரின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த இடத்தை சேர்ந்த முருகையா சரோஜினி என்பவரது வீட்டிலேயே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இதேவேளை இவ் வீட்டில் மூன்றாவது முறையாக திருட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)


Dreams come true

Job Shop கனவுகள் மெய்ப்படும்

சிறந்த வேலையில்லையா?
தகுதியற்ற வேலையில் தவிக்கிறீர்களா?
குறைந்த ஊதியம் என்ற குறையா?
ஒரே தீர்வு Job Shop உடன் இணையுங்கள்.
நவீன முறையில் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட Resumes மூலம் இலங்கையில் சிறந்த நிறுவனங்களில் தகுதிவாய்ந்த வேலை.
அழையுங்கள் : 0779829371
(5314)



**வீடு விற்பனை**

இல.56, அச்சக ஒழுங்கை கொக்குவில் கிழக்கு கொக்குவிலில் மேல்மாடி, கீழ்மாடிவீடு 2 Toilet, 1 Bathroom சுற்றுமதில், கிணறு போன்ற சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0774346417 (5309)



**விற்பனையாகிறது**

IAT வெளியீட்டுப் பிரிவின் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான நாம் அறிந்து கொள்வோம்.
VCD விற்பனையாகிறது.
**அன்னை புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.
Tel : 021 222 9881


# மரண அறிவித்தல்

## திருமதி நாகேஸ்வரி கனகலிங்கம்



வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் புலோலி, புற்றளையைவசிப்பிடமாகவும் தற்காலிகமாக வவுனியாவில் வசித்து வந்தவருமான திருமதி நாகேஸ்வரி கனகலிங்கம் கடந்த 7ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை-சிவக்கொழுந்து தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற நமசிவாயம் தம்பதிகளின் அன்பு மருமகளும் கனகலிங்கத்தின் அன்பு மனைவியும் ஸ்ரீபவான், ஸ்ரீபாமினி ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவரதி, தயாளன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அட்சயன், தனுக்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஸ்ரீரங்கராஜா, ஸ்ரீரங்கத்துரை (கனடா), ஸ்ரீரங்கதாஸ் (அவுஸ்திரேலியா), ஸ்ரீரங்கநாதன் (செம்பியன்பற்று), ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன், முன்னைநாள் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர், அமைப்பாளர் ஈ.பி.டி.பி வடமராட்சி) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (08.07.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வவுனியா, தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தற்காலிக முகவரி:
166, ஆறாம் ஒழுங்கை,
பட்டைக்காடு,
வவுனியா.

தகவல்:
ரங்கன்


அதி நவீன ஆடைத்தெரிவுகளுக்கு.......

**ஸ்ரைல் பார்க்**

எடுப்பான தோற்றம் பெற.....



# இன்று ஒரு தகவல்

## பக்தர்கள் மூன்று விதம்

ஓர் ஊரில் பெரியவர் ஒருவர் இருந்தார்.

அவர் ஒரு கோடீஸ்வரர்.

பல நல்ல காரியங்களை அவர் செய்து கொண்டிருந்தார்.

அவரைத் தேடி பலர் வருவார்கள். இருவரும் தன்னால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்வது வழக்கம்.

ஒரு சமயம் மூன்று பிச்சைக்காரர்கள் இவரைத் தேடி வந்தார்கள்.

இவரிடமிருந்து ஏதாவது பொருளுதவி பெற வேண்டும் என்று நினைத்துத்தான் அந்தப் பிச்சைக்காரர்கள் வந்தார்கள்.

ஆனால், மூன்று பேரும் ஒரே நேரத்தில் வரவில்லை; தனித் தனியாக வந்தார்கள். முதல் பிச்சைக்காரன் காலையில் வந்தான்.

அவன் கோடீஸ்வரரின் முன்னால் சென்று நின்று, ஐயா! எனக்கு ஐந்து ரூபாய் வேண்டும்... தயவு செய்து கொடுங்கள்! என்று கேட்டான்.

இவன் இப்படிக் கேட்டதும் அவருக்குக் கோபம் வந்து விட்டது.

என்ன இது? நான் ஏதோ உன்னிடம் கடன்பட்டிருப்பது போலவும்... நீ அதைத் திருப்பிக் கொடு என்று கேட்பது போலவும் இவ்வளவு அதிகாரத்தோடு பிச்சை கேட்கிறாயே?... எவ்வளவு துணிச்சல் உனக்கு? உனக்கு ஐந்து ரூபாய் எல்லாம் தர முடியாது. இந்தா இரண்டு ரூபாய்... எடுத்துக் கொண்டு ஓடு! என்று சொல்லி கோடீஸ்வரர் ஒரு இரண்டு ரூபாயைத் தூக்கி எறிந்தார்.

பிச்சைக்காரன் அதை எடுத்துக் கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டான்.

அடுத்தபடியாக பகல் வேளையில் ஒரு பிச்சைக்காரன் வந்தான்.

இவன் கோடீஸ்வரரிடம் எப்படி கேட்டான் தெரியுமா?

ஐயா!... நான் மூன்று நாளாக ஒரு வேளை உணவு கூட சாப்பிடவில்லை... தயவு செய்து எனக்கு உதவி செய்யுங்கள்! என்றான்.

உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்? என்று அவர் கேட்டார்.

நீங்களாகப் பார்த்து எவ்வளவு கொடுத்தாலும் அது எனக்குப் போதும்! என்றான் பிச்சைக்காரன்.

அவர் இந்தா பத்து ரூபாய்... இதை வைத்துக் கொள்... ஏதாவது வாங்கிச் சாப்பிடு! என்றார்.

அவன் அந்தப் பத்து ரூபாயை வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

அதன் பின்னர் மாலையில் மூன்றாவது பிச்சைக்காரன் வந்தான் .

இவன் கேட்ட விதம் எப்படி தெரியுமா?

மகாராஜா! உங்களுடைய உயர்ந்த குணத்தைப் பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் உங்களைப் பார்த்து தரிசனம் செய்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். தர்ம வழியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள்தான் கண்கண்ட தெய்வம்! என்றான்.

உடனே அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா?

ஐயா! தயவு செய்து உட்காருங்கள்... நீங்கள் மிகவும் களைத்துக் போய் வந்திருக்கிறீர்கள் ... முதலில சாப்பிடுங்கள்... மற்றவற்றைப் பின்னர் பேசலாம் என்று சொல்லி அவனை உட்கார வைத்து சாப்பாடு போட்டார்.

அவன் சாப்பிட்டு முடித்தான்.

அதன் பின்னர் கோடீஸ்வரர் அவனிடம் இப்போது சொல்லுங்கள்... நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? என்று வினாவினார்.

அவரது அன்புக்கு அந்தப் பிச்சைக்காரன் மனம் நெகிழ்ந்து ஐயா... பசியோடு வந்தேன்... நீங்கள் அறுசுவை விருந்தே படைத்துவிட்டீர்கள்... எனக்கு அது போதும்! வேறு எதுவும் தேவையில்லை. நீங்கள் என் மீது காட்டும் அன்பை நான் எப்போதும் மறக்க மாட்டேன். உங்களுக்கு எல்லாம் நல்லபடியாக நடக்கும்... உங்களுக்கு ஒரு குறையும் வராது! என்று கூறினான்.

இவனுடைய பரிவான இந்த வார்த்தைகள் அவர் மனதைத் தொட்டன. அவருக்கு அவன் மீது இருந்த அன்பு பல மடங்கு அதிகமாயிற்று.

அதன் விளைவு என்ன தெரியுமா?

இதோ பாரப்பா... இனிமேல் நீ வெளியில் எங்கேயும் போக வேண்டாம்... இங்கேயே இருந்து விடு! என்று அவர் தெரிவித்தார்.

தன்னுடைய பங்களாவிற்கு பக்கத்திலேயே அவர் அந்த ஆளுக்கு ஒரு வீடும் கட்டிக் கொடுத்தார்.

கடைசி வரையில் அந்த ஆளை அவர் தனக்குப் பக்கத்திலேயே வைத்துக் கொண்டார்.

இந்தக் கதையின் கருத்து என்ன தெரியுமா?

இறைவன் அந்தக் கோடீஸ்வரர் போன்றவராம். அந்த மூன்று வகை பிச்சைக்காரர்களும் மூன்று வகையான பக்தர்களாம்.

இன்றைக்கு இருக்கும் பக்தர்களெல்லாம் இந்த மூன்று வகையில் ஏதாவது ஒரு வகையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

முதல்வகை தான் அதிகமாக இருக்கும்.

மூன்றாவது வகை மிகவும் ஆபூர்வம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் கலாசாரப் பிரிவினரால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் கட்டுரைப் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் கழிவு முகாமைத்துவம் ,கலாசார விழுமியங்களை பேணுதல் தொடர்பாக விழிப்பூட்டலை ஏற்படுத்தும் பொருட்டு நடைபெறவிருக்கும் கட்டுரைப் போட்டியில் கீழ்ப் பிரிவில் 6 தொடக்கம் 8 வரை ஒரு மணித்தியாலமும் மத்திய பிரிவில் 9 தொடக்கம் 10வரை ஒன்றரை மணித்தியாலயமும் மேற்பிரிவில் 11 தொடக்கம் 13 வரை 2 மணித்தியாலமும் நடைபெறவுள்ளது.

இதில் ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு மாணவர்கள் பங்குபற்றக் கூடிய வகையில் மொத்தமாக 6 மாணவர்களின் பெயர் விபரத்தை எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக கிடைக்குமாறு அலுவலகத்திற்கு அனுப்பி வைக் குமாறு கேட்கப்படுகிறார்கள். (4-2)

# நாட்டில் நான்கு மில்லியன் மக்கள் குருதிச் சோகையினால் பாதிப்பு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

நாட்டு மக்களில் நான்கு மில்லியன் பேர் குருதிச் சோகைக்கு இலக்காகியிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

போதுமான அளவு இரும்புச்சத்து உடலுக்கு கிடைக்காமையே இதற்கு காரணமாக அமைந்துள்ளதென அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

இதற்கமைய உப்பில் இரும்புச்சத்தினை கலப்பது குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இதன்பொருட்டு கொழும்பு மருத்துவ ஆய்வுப் பிரிவினரால் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிடுகின்றது.

இதன் முன்னோடி திட்டமாக கம்பஹா மாவட்டத்தில் 710 குடும்பங்களை தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு 6 மாதத்திற்கு இரும்புச் சத்து கலக்கப்பட்ட உப்பினை உணவில் பயன்படுத்தவதற்காக வழங்கி அவ்வப்போது ஈமோகுளோபின் மட்டத்தை பரிசோதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் சுகாதார அமைச்சு கூறுகின்றது. (4-2)

# அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அமரர் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் அஞ்சலி நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் அதிபர் வே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா,யா/மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் ஆர்.இராகவன், தொழிலதிபர் நடேசு பாஸ்கரன்,ஆசிரியை திருமதி எஸ். தனேஸ்வரி, ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அலுவலர் க.அம்பலவாணர், பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் க.கந்தசாமி, பழைய மாணவர்களான சி.அம்பிகாவரன், பழைய மாண சங்கத்தலைவர் கே. செல்வரட்ணம், நில அளவையாளர் க.தங்கமயில் ஆகியோர் அஞ்சலி உரையை நிகழ்த்தவுள்ளனர். (2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 80 |
| தக்காளி | 40 | 50 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 50 | 60 |
| கோவா | 70 | 60 | 70 |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 25 | 30 | 30 |
| புடோல் | 35 | 30 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 | 25 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 160 |
| பெரிய வெங்காயம் | 60 | 50 | 80 |
| பாகற்காய் | 100 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 100 | 70 |
| பயற்றங்காய் | 180 | 140 | 130 |
| லீக்ஸ் | 60 | 50 | 50 |
| பீற்றூட் | 70 | 80 | 60 |
| கறிமிளகாய் | 80 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 150 | 220 | 170 |
| போஞ்சி | 100 | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 30 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 40 | 40 |

# இராசி பலன்

*08.07.2011*
*(ஆனி 23, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6 மணிக்கு*
*அட்டமி பின்னிரவு 12.07மணி வரை*
*அத்தம் பிற்பகல் 4.15 மணிவரை*
*இராகுகாலம் 10.28-11.58 மணி வரை*
*சுபநேரம் 5.58-7.28 மணிவரை*

**மேடம்** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றி தரும், நல்லவர்களின் ஆதரவும்-அறிவுரையும் கிடைக்கலாம்.

**இடபம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள், அரசு வழி அனுகூலமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொதுக் காரியங்களில் நாட்டம் கூடும், தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** கனிவான பேச்சுக்களால் காரியங்கள் சாதிக்க வேண்டிய நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும்.

**சிங்கம்** தெய்வ சிந்தனை மேலோங்கும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், பேச்சில் இனிமை பிறக்கும், தொழில் நன்மையுண்டு.

**கன்னி** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்** சயனசுகக் குறைவான நாள், ஒரு சில வேலைகளுக்காக பல மணிநேரம் காத்திருக்கும் நிலையேற்படலாம், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழில் வருமானம் அதிகரிக்கும்.

**தனுசு** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், கட்டடப் பணியை மீண்டும் தொடரும் எண்ணம் உருவாகும், தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றியளிக்கும்.

**மகரம்** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், கட்டுப்பாடான நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தடை தாமதங்கள் குறையும்.

**கும்பம்** குடும்பத்தில் கோபத்தைக் குறைப்பதால் அமைதியைக் காணலாம், பிரயாணத்தில் பொருட்களில் கவனம் தேவை, எடுத்த கருமங்கள் தாமதமாகும்.

**மீனம்** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், செய்தொழிலில் மேன்மையுண்டு, உயர்வும் கிடைக்கலாம், பொருளாதார நிலை உயர்வடையும்.

வளவன்

# உதயசூரியன் வெற்றிக்கிண்ணத்தை கரவெட்டி ஞானம்ஸ் அணி வென்றது




(கரவெட்டி)

வடமராட்சி குரும்பசிட்டி உதயசூரியன் கிரிக்கெட் வெற்றிக்கிண்ணத்தை கரவெட்டி மகேசன் அணியை தோற்கடித்து கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியனாகியது.

வடமராட்சி 20 விளையாட்டுக் கழகங்களிற்கிடையில் நடைபெற்ற 15 ஓவர் கொண்ட கிரிக்கெட் இறுதிபோட்டி கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 15 ஓவர்கள் நிறைவில் 105 ஓட்டங்களை பெற்றனர்.

இதில் துசியந்தன்,சுகந்தன் தலா 18, ஜெம்ஸ்ரன் 16, நிசாந்தன் 14 ஓட்டங்களை தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

மகேசன் அணி பந்து வீச்சின் சார்பில் ராஜதீபன்3, கமலதாசன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகேசன் அணி 73 ஓட்டங்களைப் பெற்று 13.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் அநுரதன் 18,சுதன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். ஞானம்ஸ் அணி பந்து வீச்சின் சார்பில் குணதீபன் 3, அனுசாந்த் 2, ஜெம்ஸ்ரன் 1 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இவ் இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக ஞானம்ஸ் அணியின் ஜெம்ஸ்ரனும் தொடர் நாயகனாக நவசக்தி அணியின் இரவீந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பிரதி அதிபர் அ.அரியரட்ணம் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு வெற்றிக் கேடயங்களை வழங்கிக் கௌரவித்தார். (4-24)

## பொதுக்கூட்டம்

(கரவெட்டி)

தும்பளை சைவப்பிரகாச வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பழைய மாணவர் சங்க தலைவர் சட்டத்தரணி சோ. ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் பொதுக் கூட்டத்திற்கு பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (4-2)




# பருத்தித்துறை கதிரவேற்பிள்ளை வீதியை புனரமைக்க பொதுமக்கள் கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கதிரவேற்பிள்ளை வீதி கடந்த 40 வருடங்களுக்கு மேலாக திருத்தப்பணிகள் எதுவும் இடம்பெறாது சேதமடைந்து காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியூடாக பாடசாலை மாணவர்கள், அலுவலர்கள், சந்தை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் சென்று வரும் பிரதான வீதியாக இருந்து வருகிறது.

தற்போது இவ்வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுவதால் பயணம் செய்ய முடியாத அளவிற்கு வீதி அமைந்துள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதி திருத்தும் பணியில் கூடிய அக்கறையெடுத்து மக்களின் பாவனைக்கு ஏற்றவாறு செப்பனிட்டுத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4-2-10)

# பெண்கள் மீதான வன்முறைகளுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்

(சாவகச்சேரி)

யாழ்.குடாநாட்டில் தற்போது கலாசார சீரழிவுகள், பாலியல் பலாத்காரங்கள் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்தும் முகமாக பெண்களுக்கான குடும்ப வன்முறைகள், பாலியல் துன்புறுத்தல்கள்,பலாத்காரம் தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதற்கு தக்க உதவி ஆணைக்குழுவின் உதவியை நாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதென்றும் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக சட்ட உதவி ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் எம். கே.உடலகம மற்றும் சட்ட உதவி ஆணைக்குழு அங்கத்தவர்கள் அண்மையில் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்திற்கு விஜயம் செய்த நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசாவுடனான கலந்துரையாடிய போது ஆராயப்பட்டது.

இதனடிப்படையில் பாலியல் துன்புறுத்தல்கள் குடும்பத்திலே அல்லது வேறு எந்த இடத்திலோ பெண்கள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் நேரடியாக நீதிமன்றத்திறகு முறைப்பாடு செய்யும் பொறிமுறை உருவாக்கப்படவுள்ளது.

இவ்வாறான முறைப்பாடுகள் சம்பந்தமாக பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்கும் விதமாவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென்றும் நீதிபதி மாணிக்க வாசகர் கணேசராசா மேலும் தெரிவித்தார்.

விரைவில் சாவகச்சேரி நீதிமன்றில் ஓர் அங்கமான இலவச சட்ட உதவி மன்றம் மற்றும் சமுதாய சீர்திருத்த பிரிவு ஆகியன ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-29)

# பருத்தித்துறை நகரசபை கட்டடம் விரைவில் மீள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர சபை கட்டடம் விரைவில் மீள் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

வடக்கின் துரித மீள் எழுச்சி திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இதற்கான நிதியை ஒதுக்கியுள்ளது.

இந்நகரசபை கட்டடத்தை புனரமைப்பதற்கான ஏற்பாடுகளை துரித மீள் எழுச்சி திட்டப் பணிப்பாளர் மேற்கொண்டு வருகிறார்.

பருத்தித்துறை நகரசபை கட்டடம் தற்போது அத்தியடியில் தற்காலிகமாக வீடொன்றில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இக்கட்டட மீள் புனரமைப்பிற்தாக 42.3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (4-2-10)

# பல்கலைக்கழக ஆசிரியர்களின் அமைதிப் பேரணி யாழில் இன்று

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஆசிரியர்கள் மேற்கொண்டு வரும் தொழிற்சங்க போராட்டம் குறித்து பொதுமக்களுக்கு விளக்கும் வகையில் யாழ்.நகரில் அனைத்துப் பல்கலைக் கழக ஆசிரியர்களின் அமைதிப் பேரணியும் பொதுக் கருத்தரங்கும் இன்று வெள்ளிக் கிழமை காலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றுவதற்காக தென்னிலங்கையிலிருந்து பல்கலைக்கழக ஆசிரியர்கள் பலர் இங்கு வருகை தரவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் சங்கம் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர்களுக்கான சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில்,

அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர்களின் அமைதிப்பேரணி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். புகையிரத நிலைய முன்றலில் ஆரம்பமாகி ஆஸ்பத்திரி வீதி, காங்கேசன் துறை வீதி ஆகியவற்றின் ஊடாக பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தை பேரணி வந்தடையும்.

அதனைத் தொடர்ந்து கருத்துரைகளும் இடம்பெறும். (2)

# உலக உணவுத் திட்டத்தின்கீழ் இலகு வேலைத்திட்ட கொடுப்பனவுகள்


(அச்சுவேலி)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் கடந்த மாதங்களில் இலகு வேலைத்திட்டங்களில் பங்கேற்றவர்களு... நிவாரணப் பொருட்கள் வலிக... நீர்வேலி, அச்சுவேலி பல நோக்கு... ட்டுறவுச்சங்க கிளைகளூடாக தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

இலகு வேலைத்திட்டத்தில் பங்களிப்பு செய்த குடும்பப் பயனாளிகள் தங்களது உலர் உணவு அட்டையுடன் சம்பந்தப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிளைகளில் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும் என வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் தெரிவிக்கின்றார். (4-70)







யாழ்.ஸ்பிட் நிறுவனமானது யா/ இளவாலை சிறுவிளான் கனகசபை வித்தியாலயம், யாழ்/ கட்டுடை சைவ வித்தியாலயம், நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு உதவிப் பொருட்களை அண்மையில் வழங்கியுள்ளது. விருந்தினராக கலந்து கொண்ட மெல்பேர்ன் நகரில் இருந்து வருகை தந்த என்.சூரியநாராயணன் உரையாற்றுவதையும், வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரி சி. பரிபூரணன் மாணவர் ஒருவருக்கு உதவிப் பொருட்களை வழங்குவதையும், யாழ்.கட்டுடை சைவ வித்தியாலயத்தில் உதவிப் பொருட்களை பெற்ற மாணவர்கள் விருந்தினர்களுடன் இருப்பதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் சுமுக நிலை; அகதிகள் நாடு திரும்புகின்றனர்

## ஐ.நா.சபை தெரிவிப்பு

தமிழகத்தில் இருந்து இந்த வருட ஆரம்பம் முதல் இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகள் இலங்கை திரும்பியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் இலங்கைக்கான துணை வதிவிடப் பிரதிநிதியான ஜெனிஃபர் பக்கோனிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டை விட இது சற்று அதிகமான எண்ணிக்கை என்று கூறியுள்ள அவர், அவ்வாறு இலங்கை திரும்பும் அகதிகளுக்கு தமது நிறுவனம் சில உதவிகளை வழங்கி வருவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையில் பாதுகாப்பான நிலைமை திரும்பி விட்டது என்ற உணர்வு காரணமாகத்தான் இந்தியாவில் இருந்து அகதிகள் இலங்கை திரும்பத் தொடங்கியுள்ளதாக குறிப்பிட்ட அவர்,

குடும்ப நிலை காரணமாகவும் தமது காணிகளை மீளப்பெற வேண்டும் என்ற கரிசனை உட்பட பல காரணங்களுக்காகவும் அகதிகள் நாடு திரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

அதேவேளை, அகதிகளுக்கான தகவல் பரிமாற்றத்தில் குறைவான கட்டணங்களைக் கொண்ட செல்லிடத் தொலைபேசி வசதிகள் பெரும் புரட்சியை செய்துள்ளதாக கூறும் ஜெனிஃபர் பக்கோனிஸ் அவ்வாறாக தமது உறவினர்களுடன் அகதிகள் தொடர்பு கொண்டதன் காரணமாகவே அவர்கள் இலங்கையில் பாதுகாப்பான நிலைமை இருக்கின்றது என்ற உணர்வைப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (4-2)

## யாழ்.கோட்டை புனரமைப்பு 104 மில்லியன் ரூபா செலவு

(கொழும்பு)

யாழ்ப்பாண கோட்டையை சுற்றுலாத்தளமாக அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கமைய 104 மில்லியன் ரூபாய் செலவிலான வேலைத் திட்டம் நிறைவடைந்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் யாழ்ப்பாண கோட்டையை சுற்றுலாத்தளமாக பிரகடனப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இந்தப் பகுதியை புராதன தளமாக பாதுகாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

## மஹோற்சவம்

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு வீரபத்திரர் ஆலய அலங்கார உற்சவத்தின் பத்தாம் திருவிழாவான இன்று பகல் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்துமாலை 3 மணியளவில் வீரபத்திரர் பெருமான், பத்திரகாளியம்மன் சகிதமாக வீதியுலா வந்து அருள்பாலிக்கவுள்ளார். (4-29)


ஏய்த்து எம்மை நீர் வெல்ல முயலாதீர்...




சாய்த்து வீழ்த்துவோம் போலிகளை !

இதை உங்களுக்குத் தெரிவிப்பது இலங்கை மத்திய வங்கி


## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

**இன்று எட்டாம் திருவிழா**

### கடைத்தேற வழி உண்டோ?

மின்னு புகழ் நயினை உறை நாகம்மா தாயே
உன்னுடைய திருவடிக்கு விண்ணப்பம் ஒன்று கேளாய்
பொன்னணி மணிகள் பூண்டு பூவையர் போற்றிப்பாட
வண்மைசேர் வாலிபர்கள் வாங்கியே உன்னைத் தாங்க
அன்னமாய் நடை நடந்து அணி வீதி உலாவும் போது
கண்மணியே சற்று யோசி கடைத்தேற தமிழர் வாழ்வில்
என்னதான் வழியுண்டென்று எடுத்து நீ அருளிடம்மா!

திருமதி.த.சபாநாதன்,
நயினாதீவு.

### நல்லருள் தாருமம்மா

ஞாலம் போற்றும் நயினை உறை
அம்மா நாகபூசணி தாயே
சீலம் போற்ற சிறப்புடன் வாழ
சீராய் வழிகள் காட்டிடம்மா
நாடி உன்னருள் வேண்ட வருபவர்க்கு
நன்மைகள் பல செய்யும் தாயே
பாடிப்பணிகின்றேன் – இந்தப்
பாரினில் மக்கள் வாழ்வு சிறக்க
நாகம் குடைபிடிக்க
நல்லருளினை தாருமம்மா.

ச.பகீரதன்,
சைவ சன்மார்க்க மகா வித்தியாலயம்.

### பிணிக்கு மருந்தானவளே

நாற்புறமும் கடல் சூழ்ந்த நயினையம் பதியினிலே
வீற்றிருந்து நல்லாட்சி புரிந்திடுவாள் நாகம்மை
நேர்த்திக்கடன் முடிப்பதற்காய்த் திரண்டுவரும்–பக்தர்களை
பார்த்திருந்து நேசக்கரம் நீட்டிடுவாள் எம் அம்மை

புங்கங்கரை வீதியிலே கோபுரத்தைக் கண்டிடலாம்
அலைகடல் நடுவினிலே ஆலயத்தைக் கண்டிடலாம்
அமுதசுரபி... தனில் பசிப்பிணியை... நீக்கிடலாம்
ஆலய விருட்சத்திலே களைப்புகளை தீர்த்திடலாம்.

அன்னையின் பக்தர்,
(நயினை)
யா/ஸ்ரீஞானபண்டித வித்தியாலயம்,
கொக்குவில்.

### காத்தருள்வாய்

நித்தம் உன் பாதம்
வேண்டி நின்றோம்
சித்தம் தெளிந்திட
சிந்தை மகிழ்ந்திட
புத்தம் புது வாழ்வருள்வாய்
புதுமைத் தெய்வமே
பத்தியாய் பணிந்திட்டோம்
பாரினில் எமை காத்தருள்வாய்

குருதாசன்,
பண்ணாகம்.


**ரூபா பன்முக வர்த்தகம்**

இல.104, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8330




வவுனியா நகரசபைக்குட்பட்ட பூந்தோட்டம் பிரதான வீதி செப்பனிடும் பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் வீதியில் கற்கள் பரவப்பட்டுள்ளதையும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்கள் வேலையில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

# சிறுபான்மை மக்களின் பிரச்சினை குறித்து அரசாங்கம் அக்கறை கொள்ள வேண்டும்

## மங்கள சமரவீர தெரிவிப்பு

சிறுபான்மை மக்கள் பிரச்சினை குறித்து அரசாங்கம் உண்மையாகவே கவனம் செலுத்தினால் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்ட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டால் மட்டுமே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியும் என கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடும் அதற்கான தீர்வுத் திட்டமும் தெளிவாக முன்வைக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

காத்திரமான யோசனைத்திட்டமொன்று முன்வைக்கப்படாது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினை அமைத்து பேச்சுவார்த்தை நடத்துவது நேரத்தை விரயமாக்கும் முயற்சியாகவே தாம் நோக்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மை மக்கள் பிரச்சினை குறித்து அரசாங்கம் உண்மையாகவே கவனம் செலுத்தினால் அவர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக இடம்பெயர் மக்கள் மீள் குடியேற்றம் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார். 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு இந்தியா அழுத்தங்களை பிரயோகிக்கும் காரணமாக திடீரென நாடாளுமன் றத் தெரிவுக்குழு ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் முனைப்புகாட்டி வருவதாக குறிப்பிட்டுள்ளார். (4-2)

# முன்னைய காலத்தைவிட தற்போது பெண்களுக்கு அதிகளவான சுதந்திரம்

## ஐ.நா.சபை தெரிவிப்பு

சர்வதேச ரீதியில் முன்னரைவிட அதிகளவான சுதந்திரத்தை பெண்கள் அனுபவிப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. எனினும் வேலைத் தளங்களில் பெண்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதாகவும் இல்ல வன்முறைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் பெண்களை பாதுகாப்பதற்காக பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ள நிலையிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பெரும்பாலான நாடுகள் தோல்வியடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

வேலைபுரியும் பெண்களின் அரைவாசிக்கும் அதிகமானோர் தொழிலாளர் பாதுகாப்பு சட்டங்களினால் ஆளப்படாத ஒரு துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாகவும் ஐ.நா. தெரிவிக்கின்றது.

இதேவேளை நீதித்துறை மற்றும் பொலிஸாரிடம் இருந்து தமக்குரிய நீதிகளைப் பெற்றுக் கொள்வதில் பெண்கள் பல்வேறு சவால்களை சந்திப்பதாகவும் ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான மகளிர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக தெற்காசிய நாடுகளில் நீதித்துறை மற்றும் பொலிஸ் துறை போன்றவற்றில் பெண்களின் பிரதிநிதித்துவம் போதியளவு இல்லாமையும், பெண்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் தடங்கலை ஏற்படுத்துவதாகவும் கண்டறியப்பட் டுள்ளது.

எதிர்காலத்தில் பெண் களின் நலன்களை மேம்படுத்தும் பல்வேறு திட்டங்களுக்கு சர்வதேச ரீதியிலான நிதி ஒதுக்கீடுகள் அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

(4-2)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களின் கவனத்திற்கு

(வவுனியா)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாக கடமையாற்றி தற்காலிகமாக யாழ். மாவட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் ஆடி மாத வேதனப்பட்டியல் யாழ். கல்வி வலய நிதிக் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஆசிரியர்கள் யாழ். கல்வி வலயத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வேதனப் பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ். வலயக் கல்வி நிர்வாக அலுவலர் கேட்டுள்ளார். (4-2)

# மஹோற்சவம்

(கரவெட்டி)

வடமராட்சி மாலுசந்தி ஸ்ரீவரதராஜ ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 5 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும். எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

அத்துடன் தினமும் மாலை 6 மணிக்கு வாழ்க்கை சைவநெறி தொடர் சொற்பொழிவொன்று சித்தசகாரம் சிவஸ்ரீ அழகு கேதீஸ்வர தேசி கரினால் நடத்தப்படவுள்ளது. (4-2)


மின்னுவதெல்லாம் பொன்னல்ல...




ஊன்றிக் கவனி உண்மை விளங்கும் !

(சி-3671)

இதை உங்களுக்குத் தெரிவிப்பது இலங்கை மத்திய வங்கி

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை
# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 11

ஆசிரியர் :- எஸ்.ஏ.சந்திரபவன்,
கொழும்பு.

## பகுதி - II

கறுப்பு வண்ணக் காக்கையாரே
கண்ணை உருட்டிக் கரைகின்றாய்
விருந்தில் கலந்து கொள்ளவா
விரைந்து உறவை அழைக்கின்றாய்?

ஒற்றுமையின் வலிமையை
உணர்த்த வானில் கரைகின்றாய்
வண்ணம் கறுப்பே ஆனாலும்
வருத்தம் மனதில் இல்லையே!

01) மேலுள்ள பாடலை நன்றாக வாசித்து, அது தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

1) 'கறுப்பு' என்பதன் ஒத்தசொல் ஒன்று எழுதுக.
(......................................)

2) 'ஒற்றுமை' என்பதன் எதிர்க்கருத்தை எழுதுக.
(......................................)

3) 'கண்ணை' எனும் சொல்லைப் பன்மையாக எழுதுக.
(......................................)

4) க்ண்ணை உருட்டிக் கரையும் பறவை எது?
(......................................)

5) எதனை உணர்த்துவதற்காக இப்பறவை வானில் கரைகின்றது தாம்?
(......................................)

6) எதைப்பற்றிய வருத்தம் இப்பறவையின் மனதில் இல்லை எனக் கூறப்படுகின்றது?
(..........................................................................)

(06 புள்ளிகள்)

02) கீழ்வரும் சொற்களுக்கான ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.

1) வண்ணம் - ..............................
2) கண் - ..............................

(02 புள்ளிகள்)

03) கீழ்வரும் சொற்களின் எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.

1) கறுப்பு - ..............................
2) ஒற்றுமை - ..............................

(02 புள்ளிகள்)

04) கீழ்வரும் வாக்கியங்களை வாசித்து விடை தருக.

அ) வேலியோரத்தில் சரசரவெனும் சத்தத்தைக் கேட்ட ஆதவன் அங்குமிங்கும் பார்த்தான்.

1) இவ்வாக்கியத்தில் உள்ள இணைமொழி யாது?
..............................................................

2) இவ்வாக்கியத்தில் காணப்படும் இரட்டைக் கிளவிச் சொல் எது?
..............................................................

ஆ) விட்டுக் கொடுத்து வாழும் வாழ்க்கையே சிறந்தது.

3) இவ்வாக்கியத்தில் உள்ள மரபுத் தொடரை எழுதுக.
..............................................................

இ) வானம் மெல்ல மெல்ல கறுக்கத் தொடங்கி, சற்று நேரத்தில் ஒரே கன்னங்கரிய இருட்டாக மாறிவிட்டது.

4) இவ்வாக்கியத்தில் உள்ள அடுக்குத் தொடர் யாது?
..............................................................

5) இவ்வாக்கியத்தில் உள்ள அடுக்கிடுக்குத் தொடர் யாது?
..............................................................

(05 புள்ளிகள்)

05) கீழ்வரும் வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) மனதினை ஒருநிலைப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வழி எது?
1) உடற்பயிற்சி 2) தியானம் 3) நித்திரை

2) ஆரோக்கியமான விரும்பத்தக்க செயல் பின்வருவனவற்றுள் எது?
1) தனித்து வேலை செய்தல் 2) சுயநலமாயிருத்தல் 3) கூட்டாக வேலை செய்தல்

3) வளர்ப்புத் தாயாக சில சந்தர்ப்பங்களில் செயற்படும் பறவை எது?
1) குயில் 2) காகம் 3) கிளி

4) தனது முயற்சியினால் கூடு ஒன்றினை அமைத்துக் கொள்ளும் பறவை எது?
1) கிளி 2) மைனா 3) புறா

5) பகலில் அதிக நடமாட்டம் இல்லாத, இரவில் இரைதேடும் பிராணி எது?
1) நாய் 2) முயல் 3) பூனை

6) பின்வரும் விளையாட்டுக்களில் எமது நாட்டின் தேசிய விளையாட்டு எது?
1) கரப்பந்தாட்டம் 2) எல்லே 3) வலைப்பந்தாட்டம்

7) தேசியக் கொடியில் இடம்பெறாத அம்சம் பின்வருவனவற்றுள் எது?
1) அரச இலை 2) தர்மச் சக்கரம் 3) சிங்கம்


8) சிகிரியாக் குன்றும் கிளிகளும் இடம்பெற்றுள்ள தாள் நாணயம் எது?
1) 10 ரூபா 2) 50 ரூபா 3) 100 ரூபா

9) இக்குறியீடு எதனை உணர்த்துகின்றது?
1) ரூபவாஹினி கூட்டுத்தாபனம்
2) பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
3) தபால் திணைக்களம்

10) ஒரு பொருளின் விலையோடு தொடர்புடைய இரகசியக் குறியீடு பின்வருவனவற்றுள் எது?
1) 2) SLS 3) RS


(10 புள்ளிகள்)

06) கீழே தரப்பட்டுள்ள உருக்களின் பெயர்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1)  (............)
2)  (............)
3)  (............)
4)  (............)

(04 புள்ளிகள்)

07) இலங்கையின் அரச இலச்சினையும் பகுதிகளின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. பெயர்களுக்கு எதிரேயுள்ள அடைப்புக்களில் பொருத்தமான பகுதிகளின் ஆங்கில எழுத்துக்களை எழுதுக.




1) தர்மச் சக்கரம் - (......................)
2) செங்கதிர் - (......................)
3) தாமரைப் பூவிதழ் - (......................)
4) சந்திரன் - (......................)
5) சூரியன் - (......................)
6) நிறைகலசம் - (......................)

(06 புள்ளிகள்)

(14ஆம் பக்கம் பார்க்க)

# டெங்கு குறித்து தெளிவின்மையால் சிகிச்சை பெறுவதில் தாமதம்

## சுகாதார அமைச்சு அறிவுறுத்து

டெங்கு காய்ச்சல் தொடர்பில் போதிய தெளிவின்மை காரணமாக சிகிச்சைகளை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்படுவதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக் கையில் குறிப்பிட்டுள்ளது.

நோய்த்தாக்கம் வலுப்பெற்றதன் பின்னர் சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள முனைவ தன் மூலம் நோயை குணப்படுத்துவதில் வைத்தியர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக அந்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

கடும் காய்ச்சல், தலைவலி, கண்ணுக்க கீழ் வலி, சருமத்தில் சிவப்பு நிறத்திலான புள்ளிகள் தோன்றுதல், வாந்தி, உணவு அஜீ ரணம் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக சிசிக்சை பெற்றுக் கொள்ளு மாறு சுகாதார அமைச்சு மக்களுக்கு அறி வுரை விடுத்துள்ளது.

வெளிருதல், கைால் குளிரடைதல், நாடித்துடிப்பு குறைவடைதல், இரத்த அழுத் தம் குறைவடைதல் போன்றனவும் டெங்கு காய்ச்சலுக்கான அறிகுறிகள் என தெரிவிக் கப்படுகின்றது.

இதேவேளை வவுனியா நகரசபை எல் லைக்குட்பட்ட பகுதியில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டமொன்றினை சுகாதார திணைக் களம் அமுல்படுத்தியுள்ளது.

இதன்போது நகரத்தின் பல்வேறு இடங் கள் சுகாதார அதிகாரிகளால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குருமன்காடு, வைரவப்புளியங்குளம் திருநாவற்குளம் மற்றும் குட்செட்வீதி ஆகிய இடங்களில் நுளம்பு பெருகுவதற்கான சந் தர்ப்பம் உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மழைக் காலம் ஆரம்பமாவதற்கு முன்ன தாக தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக் கும் வகையில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. (4-2)

# வடகிழக்கின் புதிய விடுதிகளுக்கு சிங்களத்திலான பெயர்கள்

## அரியநேத்திரன் எம்.பி. குற்றச்சாட்டு


வடக்கு-கிழக்கில் பெயர் மாற்றம் மேற் கொள்ளப்படுவதாகக் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரிய நேத்திரன் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் பெருமளவிலான விடுதி கள் அங்குரார்ப்பணம் செய்யப்படுகின்ற போதிலும் அவற்றின் பெயர்கள் கூட தமிழில் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் பெயர்களுக்கு பதிலாக கிங்கள பெயர்கள் இடப்படுவதாகத் தெரிவித்துள்ளார். வடக்கு-கிழக்கில் தொடர்ந்தும் பதற்ற நிலைமை நீடித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் மட்டக்களப்பில் வங்கியொ ன்று கொள்ளையிடப்பட்டதாக சுட்டிக்காட்டி யுள்ளார். இந்த வங்கிக் கொள்ளைக்கும் அவசரகாலச் சட்டத்திற்கும் தொடர்பு கிடை யாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் இனவாதமாக செயற்படக் கூடாது என விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தான ந்த அலுத்தகமகே கோரிக்கை விடுத்துள் ளார். (4-2)



இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் ஏற்பாட்டில், பிரான்ஸ் நாட்டிற்கு கல்விச் சுற்றுலாவினை மேற்கொள்ளவுள்ள யா/மகாஜனக் கல்லூரி மாணவி தரண்யா மணிசேகரனுடன் பாடசாலை அதிபர், பெற் றோர் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# தமிழ்ச்செல்வனின் மடிக்கணனியில் புலம்பெயர் தமிழர்களின் பெயர்கள்

## புலனாய்வாளர்கள் கண்டுபிடிப்பு

இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த வருடம் கைப்பற்றப்பட்ட முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல் வனின் கணனியில் இருந்து பல தகவல்களை இராணுவக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

அதில் புலம்பெயர் நாடுகளில் இருக்கும் பலரது பெயர் விபரங்களும் மற்றும் அவர்களது தொடர்புகளையும் இராணுவத்தினர் பெற்றுள் ளதாகவும் மேலும் அந்தக் கணனியின் தொடர் இலக்கத்தை ஆராய்ந்ததில் அந்தக் கணனி கொழும்பு வெள்ளவத்தை நெல்சன் பிளே சில் வசித்த ஒருவரின் பேரில் கொள்வனவு செய்யப்பட்டது.

அவர் கொழும்பில் உள்ள ஒரு பிரபல செய்மதி தொடர்பாடல் நிறுவனத்தில் வேலை செய்தவர் எனவும் சமாதான காலப்பகுதியில் இவரே விடுதலைப்புலிகளுக்கு பெருமளவு செய் மதி தொடர்பாடல் சாதனங்களை தனது நிறுவ னத்தினூடாக அனுப்பியுள்ளார் எனவும் இரா ணுவப் புலனாய்வுப்பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

அந்நபரை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் வலைவீசி தேடி வருவதாகவும் கடந்த 5 ஆம் திகதி அவரது வீட்டிற்கு சென்று மீண்டும் அவரை தேடி உள்ளதாகவும் எனி னும் அவர் தலைமறைவாகி வெளிநாடு சென் றுள்ளதாகவும் தெரியவருகிறது. (4-2)


நாளை முதல்
மாபெரும் பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி
நல்லூர்
சரவணா ரெக்ஸ்

- இந்தியன் பட்டு சாறிகள்
- சில்க் சாறிகள்
- சீக்குன்ஸ் சாறிகள்
- கொட்டன் சாறிகள்
- சில்க் பஞ்சாபித் துணிகள்
- கொட்டன் பஞ்சாபித் துணிகள்
- றெடிமேற் பஞ்சாபிகள்
- ஸ்கேட் அன் பிளவுஸ்கள்
- ஆண்களுக்கான சேட், T சேட் றெடிமேற் ஜீன்சுகள், ஜீன்ஸ் துணிகள், வேட்டிகள் என்பன பலபல டிசைன்களில் பல தெரிவுகளில் மாபெரும் மலிவு விற்பனையில் பெற்றுக்கொள்ளலாம்.

விதம் விதமான எண்ணற்ற தெரிவுகளுக்கு

இந்தியாவில் இருந்து விசேடமாக இறக்குமதி செய்யப்பட்டது

உங்கள் தெரிவுகளுக்கு இன்றே விரையுங்கள்

யாரும் எதிர்பாரா மாபெரும் மலிவு விற்பனை

வாடிக்கையாளரின் நலன்கருதி விஸ்தீரமான இடத்தில் மலிவு விற்பனை நடைபெறும்

(அ-3673)

இடம்:- சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை (கெங்காதரன் மருத்துவமனை அருகாமை), கே.கே.எஸ். வீதி, தட்டா தெரு சந்தியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

காலம்:- 09.07.2011 தொடக்கம் 31.07.2011 வரை

நேரம்:- காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை

இந்த மாபெரும் மலிவு விற்பனையை வாடிக்கை யாளர் அனைவரும் தவறவிடாதீர்கள்

குறிப்பு:- ஆடி தள்ளுபடியை முன்னிட்டு ஏழு நாட்களும் வியாபாரம் நடைபெறும்.



# கலாநிதி சோ.கிருஷ்ணராஜா நினைவுப் பேருரை-2011

11

## பல்வகைகள் ஒன்று சேர்தல்
## [Assemblage of Multiplicity]

கத்தில்,

1.அவரது குடும்பப் பின்னணி, யாழ்ப்பாணச்சூழல்

2.பேராதனையிற் பெற்ற மெய்யியல் கல்வி



சோ. கிருஷ்ணராஜா

மார்க்கை உருவாக்கியவையாகப் பின்வரும் சேர்க்கைகளைக் கூறலாம்.

1.அவர் பிறந்த இடம், சூழல், சமூகம், சமயம்

2.அவர் வாழ்ந்த காலகட்டம்

3.ஓவியக் கல்லூரியில் அவர் பெற்ற பயிற்சிகள்



கலாநிதி மௌனகுரு
யாழ் பல்கலைக்கழகம்

4.உலக ஓவியங்களுக்கு அறிமுகமாகியவை.

5.பிக்காசோ, ஜெமினி ரோய், போன்றவர்களின் ஓவியத்தாக்கம்

6.நாட்டுப்புறக் கலையில் அவருக்கிருந்த ஈடுபாடு

7.1980 களுக்குப் பின்னரான யாழ்ப்பாணச்சூழல் .

இச்சேர்க்கைகளில் அவர் ஒரு நவீன ஓவியராக முகிழ்ந்தார். மார்க்கின் வாரிசுகளாக இன்று பல ஓவியர்கள் நம்முன் காட்சி தருகிறார்கள். நவீன ஓவியம் இன்று ஈழத்தமிழரின் கலை உலகில் நிரந்திரமாகிவிட்டது.

**பேரா.சோ.கிருஷ்ணராசா(1947-2009)**

கிருஷ்ணராசா 1947க்கும் 2009க்கும் இடையில் வாழ்ந்தவர். யாழ்ப்பாணத்திற் பிறந்த இவர், தமது கல்வியை யாழ்ப்பாணத்திலும் உயர் கல்வியை பேராதனையிலும் ph.D.பட்டத்தை ரஷ்யாவிலும் பெற்றவர்; மெய்யியலாளர். பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் பணிபுரிந்தவர்.மாக்ஸிஸ சிந்தனையால் கவரப்பட்டு மெய்யியலை அதனடிப் படையாக அணுகியவர். இந்தியக் கலைக் கொள்கைகள், இந்துக்கலைக்கொள்கைகள் பற்றி, ஓவியங்கள் பற்றித் தமிழில் புதிய கருத்துக்களைக் கூறியவர். பின் நவீனத்துவ சிந்தனைப் போக்குகளை உள்வாங்கிச் சிந்தனை செய்த இவர், மாக்ஸிஸ சிந்தனையில் நின்று கைலாசபதி சிவத்தம்பி ஆகியோரின் சிந்தனைகளினின்று சற்று மாறுபட்டவர்.

மெய்யியலாளரான இவரில் விக்கின்ஸன், கார்ல் பொப்பர் ஆகியோரின் செல்வாக்கும் தெரிதா, பூக்கோ போன்ற பின் நவீனத்துவ சிந்தனை முன்னோடிகளின் செல்வாக்கும் இருந்தன. பின் நவீனத்துவ உரையாடல்களை ஈழத்தில் தொடக்கியவராக இவர் காணப்படுகிறார். பின் நவீனத்துவம் பற்றித் தமிழில் எழுதப்பட்ட அவரது நூல் பின்நவீனத்துவம் பற்றிய நல்லதோர் அறிமுகமாகும். இவ்வகையில் மெய்யியலிலும் விமர்சனத்திலும் அண்மைய புதிய போக்குகளை அறிமுகம் செய்பவராகவும் அதன் வழியிற் கலைகளை அணுகுபவராகவும் கிருஸ்ணராஜா முகிழ்த்தார்.

**19 ஆம் நூற்றாண்டின் பின் ஈழத்தமிழர் மத்தியில் உருவான கலை - இலக்கியப் போக்குகளை தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்கூடாகப் புரிந்து கொள்ளல்**

மார்க்கு போன்ற ஓவியர்களின் நவீன ஓவியம் பற்றி மரபுவழி ஓவியர்களும் விமர்சகர்களும் அதிருப்தியும் கண்டனமும் தெரிவித்தபோது அவற்றைத் தத்துவ ரீதியாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் கலைக் கொள்கைகள் ரீதியாகவும் விளக்கி அறிமுகம் செய்தவர் கிருஸ்ணராஜா. இவரது சிந்தனை எழுத்துருவாக்கத்தில்,

1.அவரது குடும்பப் பின்னணி, யாழ்ப்பாணச்சூழல்

2.பேராதனையிற் பெற்ற மெய்யியல் கல்வி

3.ரஷ்யாவில் பெற்ற மேனிலைக் கல்வி

4.மாக்ஸிஸ சிந்தனை

5.தமிழ்த் தேசிய சிந்தனை

6.பின்நவீனத்துவ சிந்தனை

7.அவரின் மெய்யியல் விரிவுரையாளர் தொழில் (பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்.பல்கலைக் கழகம்)

8.யாழ்ப்பாணத்து இடதுசாரிகளின் தொடர்பு

என்பனவற்றின் சேர்க்கை இணைவதனைக் காணலாம்.

(தொடரும்)

# நோய்பரப்பும் நுளம்புகளில் ஆய்வு

01

**அறிமுகம்**

பூச்சியியலில் வைத்தியப் பூச்சியியல், விலங்குப்பூச்சியியல், விவசாயப்பபூச்சியியல் என முப்பிரிவுகள் உண்டு. இம் மூன்றினுள்ளும் வைத்தியப்பூச்சியியல் மனிதர்களுக்கு பூச்சிகளால் பரப்பும், பரம்பும் நோய்களைப்பற்றி எடுத்துக்கூறி பகுப்பாய்வுக்குட்படுத்தி அறிக்கைப்படுத்தலாகும். இதன் மூலம் நோய்க்காரணிகளையும் இனங்கண்டு வைத்திய முறையில் சிகிச்சை அளிப்பதுடன் மலேரியா நோயாளிகள் கண்டு பிடிக்கப்படும் கிராமங்களுக்கு பூச்சி கொல்லிகள், குடம்பிக் கொல்லிகள் விசுறுவதன்மூலம் காவியைக் கட்டுப்படுத்தல். இப்படியான பூச்சியினத்தை நாம் பாகுபடுத்தி, வகுத்துப்பிரித்து ஆய்ந்தறிவோம். பூச்சி வர்க்கங்கள் எல்லாம். முதுகெலும்பு அற்ற தொகுதிக்குள் உட்படுத்தப்பட்டுள்ளன. முதுகெலும்புகள் உள்ளவைகளாக ஏனைய மிருகங்கள், மனிதர்கள், ஊர்வன, பறப்பன என்பவையும் மீனினமும் உள்ளடங்கும்.

**வரைவிலக்கணம்:-**

மலேரியாப்பூச்சியியல் மூலம் மலேரியா காவி, ஒட்டுண்ணி, கட்டுப்பாடு, சிகிச்சை என்பவற்றுடனான தொடர்சங்கிலிக்கான ஏதுக்களையும் நடவடிக்கைகளையும் வைத்திய, பொதுச்சுகாதார அமைப்புக்ளுக்கூடாக பின்தங்கிய விவசாய கிராமங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு வருமுன்காக்கும் நடவடிக்கையாக, மலேரியாப் பூச்சியியல் ஆய்வின் மூலம் பூச்சிகளால், நுளம்புகள் உட்பட- பரப்பப்படும் நோய்களை கண்டு பிடித்து அதற்கான மாற்று நடவடிக்கைகள் எடுத்து சகல பொது மக்களையும் இப்படியான பூச்சிகளினால் பரவும் நோய்களிலிருந்து பாதுகாத்தல்; முக்கியமாக வன்னியில் பரவும் கொலரா, மலேரியா, டெங்கு ஆகிய இம் மூன்று பூச்சிகளால் பரவும் நோய்களுக்கு நுளம்பு, வீட்டு ஈ அடர்த்தியைக் குறைப்பதற்கான மாற்று நடவடிக்கைகள் எடுத்து சகல பொது மக்களும் சுகதேகிகளாக வாழ ஏற்பாடு செய்தல்; முன்னேறும் உலகத்திற்கு ஏற்றமாதிரி மாற்றமடைதலாகும்.

Dr ம.இராசதுரை,
இம்பர் சிட்டி,
பருத்தித்துறை.

**முள்ளந்தண்டற்றவை**

1.ஒரே ஒரு உட்கருவுள்ளன (அமீபா, கிருமிகள்)

2.புழுக்கள்

3.பூச்சியினம்

**முள்ளந்தண்டுள்ளவை**

1. மனிதர்கள்

2.மிருகங்கள்


3.ஊர்வன

4.பறப்பன

5.நீர்வாழ்மீனினம்

6.ஈருடகவாழிகள்

7.மூவூடக வாழிகள்




வைத்தியப்பூச்சியியலில் மனிதர்களுக்கு நோய்களைப் பரப்பி தீங்கு விளைவிக்கும் பூச்சியினங்கள்

1.நுளம்பு- Mosquitoes

2.வீட்டு ஈக்கள்-House Flies

3. பேன்கள்- Lice

4. தெள்ளுகள்-Fleas

5. உண்ணிகள்-Mites

6. மட்டத்தேள்கள்- Centipats

7. நத்தைகள்-Snails

8. வேறு ஈக்கள்-Othere Flies

9. அட்டைகள்-Leeches

10. மூட்டைப் பூச்சிகள்-Bugs

11. கரப்பான்பூச்சி- Cockroches

(தொடரும்)

# தடைகளையும் சோதனைகளையும் துவம்சம் செய்யும் துணிவு படைத்த 8 ஆம் எண்ணில் பிறந்தவர்களே!

### நண்பர்கள்

1,4 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களே இவர்களுக்குச் சிறந்த நண்பர்களாகவும் கூட்டாளிகளாகவும் இருப்பார்கள். 8 ஆம் திகதி பிறந்தவர்களாலும் இவர்கள் நன்மையடையலாம். 6,5 திகதியில் பிறந்தவர்களாலும் நன்மையடையலாம்.

### நோய்கள்

பெரும்பாலோர்க்கு வற்றுவலி இருக்கும். ஆஸ்துமா, மூச்சுவிடுதல் பிரச்சினை அடிக்கடி உண்டு. தலைவலி, கிறுகிறுப்பு ஆகியவற்றால் அடிக்கடி பாதிக்கப்படுவார்கள்.

இரத்தத்தில் விச சேர்க்கை எளிதில் ஏற்பட்டு விடும். எனவே அடிக்கடி இரத்தப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. வாதம், மூட்டுப் பிடிப்புகளால் பாதிப்புகள் அதிகம் உண்டு. ஈரல் அடிக்கடி பாதிக்கப்படும். கோப்பி, தேநீர், மது போன்றவற்றில் நிதானம் தேவை. உணவில் எலுமிச்சம் பழம், அன்னாசி, வாழை போன்றவற்றை அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும். அகத்திக்கீரை மிகவும் நல்லது.

சனி யந்திரம் சனி 33
12714
13119
81510

சனி மந்திரம்
நீலாஞ்ஜந ஸமாபாஸம்
ரவிபுத்ரம் யமாக்ரஜம்
ச்சாயா மார்த்தாண்ட ஸ்ம்பூதம்
தம் நவாமி சநைச்சரம்

### சிறப்புப் பலன்கள்

மக்களின் வாழ்க்கைக்கும் முன்னேற்றத்துக்கும் ஆதாரமாக விளங்குவது இந்த 8 ஆம் எண்ணே!

ஆனால் மக்கள் இந்த எண்ணை வெறுத்து ஒதுக்குகிறார்கள்.

இவர்கள் எடுத்துக் கொள்ளும் எந்த செயலாளாலும் அவற்றில் எதிர்ப்பும் முட்டுப் கட்டையும் உண்டு. ஆனால் எதிர்ப்பையும் தடைகளையும் பொருட்படுத்தாமல் காரியங்களில் ஈடுபடுவார்கள். வெற்றி பெறுவார்கள். இவர்கள் தங்களைப் போல் மற்ற பாதிக்கப்பட்ட மக்களிடம் மிகவும் அன்பு பாராட்டுவார்கள். மனதில் இரக்க குணம் இருக்கும். இவர்களில் பெரும்பாலோர் பெரிய சாதனைகளை கடின உழைப்புடன் செய்து முடிப்பார்கள்.

இது விதியின் எண்ணாக இருப்பதால் ஒருகுறிப்பிட காலம் வரையிலும் வெற்றியோ அல்லது தோல்வியோ தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். ஆனால் அதைப் பற்றிக் கவலைப்படாமல் தங்களது கடமைகளை இவர்கள் தீவிர முனைப்புடன் செய்து கொண்டிருப்பார்கள். இவர்கள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு மக்களுக்கு உண்மையான நன்மை செய்வார்கள்.

8 ஆம் எண்ணில் பிறந்தவர்களுக்கு உறவினர்களின் ஆதரவு பெரும்பாலும் கிடைக்காது. இதனால் வெளியூர், அடுத்த இன மக்கள், வெளிநாடு என அந்நியர்களிடமிருந்தே இவர்களுக்கு ஆதரவு கிடைக்கும். இவர்களுக்கு தொடர்ந்து துன்பங்கள் வந்தால் பின்பு தொடர்ந்து யோகம் வரப் போகிறது என்று பொருள்.

எனவே நேர்மை வழியில் உழைத்தால் வெற்றி மேல் வெற்றி இவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும். இந்த எண்ணின் ஒரு பக்கம் கடுமையர்ன உழைப்பு, கருணை, ஏற்றம், பெருத்த இராஜ யோகம் உண்டு. மறுபக்கம் புரட்சி, எழுச்சி, அராஜகம், ஒழுங்கின்மை போன்றவையும் உண்டு.

## போராடும் குணம் கொண்டவர்கள்

எல்லாம் விதிப்படியே தான் நடக்கிறது என்று இவர்கள் புலம்புவார்கள். பல நேரங்களில் வாழ்வில் விரக்தியும் ஏற்படும். இருப்பினும் தங்களது வாழ்நாளிற்குள் இவர்கள் பெருத்த யோகத்தை அனுபவித்தே செல்வார்கள். மனம் விரக்தியடையும் போது தற்கொலை எண்ணங்கள் கூடச் சிலருக்குத் தோன்றும். இவர்கள் சிறந்த நீதிமான்கள், தெய்வத்திற்கு பயந்தவர்கள். 8 ஆம் எண்ணானது ஒரு மனிதனைப் புடம் போட்டு அவனைத் தங்கமாக்கி விடும். இவர்களின் வாழ்க்கையில் எல்லா முக்கிய நிகழ்ச்சிகளும் 8 ஆம் எண் வரும் நாட்களிலேயே நடைபெறும்.

தாங்கள் எண்ணியதை கடைசி வரை நிறைவேற்ற வேண்டுமென்ற தீவிர எண்ணம் உடையவர்கள். தாங்கள் நினைத்ததை அப்படியே வெளியில் சொல்லமாட்டார்கள். தங்கள் வாழ்வின் பிற்பகுதியில்தான் பெரும்பாலானோர் இன்பத்தை அனுபவிக்கின்றனர். இவர்களுக்கு தன்னம்பிக்கை குறைவு. எனவே அதை அவசியம் வளர்த்துக் கொள்ள வேண்டும். தங்களை உலகத்தில் தனிமையாக இருப்பதாக உணர்வார்கள். எனவே எளிதில் அடுத்தவர்களை நம்பமாட்டார்கள்.

இவர்களுக்குப் பெயர் எண் நன்றாக இருந்தால் மட்டுமே கெட்ட விதியினை மாற்றிக் கொள்ள முடியும்.அதில் கவனக்குறைவாகவோ அலட்சியமாகவோ நடந்து கொள்ளும் போது துன்பங்கள் தொடர்ந்து வரும்.பிறர் படும் துன்பம் கண்டு சகிக்காத மனம் கொண்டவர்கள். தங்களால் உதவி செய்ய முடியா விட்டாலும் உதவிகிட்டும் இடத்தை யாவது காட்டுவார்கள்.

8 ஆம் எண்ணின் ஆதிக்கம் குறைந்தோர் திருட்டு, வழிப்பறி, கொலை போன்ற வழிகளில் துணிந்து ஈடுபடுவார்கள்.அதனால் நிச்சயம் தண்டனையும் அடைவார்கள்.

எந்தச் செயலையும் சற்று மெதுவாக செய்வார்கள். தரையைப் பார்த்தே நடப்பார்கள். எந்த ஒரு பிரச்சினைக்கும் நடுவராக இருந்து நீதி சொல்ல சிறந்தவர்கள். தம்மிடம் நட்புக் கொண்டவர்களையும் பகைமை கொண்டவர்களையும் தமது வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டார்கள். உடல் உழைப்பில் இவர்களுக்கு நாட்டம் அதிகம். பெரும்பாலும் தனிமையாக இருப்பதையே விரும்புவார்கள். இவர்களது பேச்சில் விதி, வாழ்க்கை, தர்மம் என்று அடிக்கடி வார்த்தைகள் வரும். இவர்களுக்கு காதல் விவகாரங்கள் வெற்றி கொடுக்காது. திருமணமும் பொதுவாக அந்நியத்தில் அடுத்த சாதி மதம், அந்நியநாடு தான் நடக்கும். இவர்களது செல்வநிலை ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். எந்த முன்னேற்றம் வந்தாலும் அதை அனுபவிக்க முடியாமல் பல சோதனைகள் கூடவே வந்துவிடும்.

சுதந்திரமான் தொழிலைக் காட்டிலும் அடுத்தவர்களின் கீழ் வேலை செய்வதையே விரும்புவார்கள். ஆனால் 8 ஆம் எண் வலிமை பெற்றவர்கள். பெரும் தொழிலதிபர்களாகவும் கடல் கடந்து தொழில் செய்யும் வல்லுநர்களாகவும் இருப்பார்கள். உடம்பிலோ அல்லது மனத் திலோ ஏதாவது ஒரு குறை அல்லது நோய் இருந்து கொண்டே இருக்கும்.

### அதிர்ஷ்ட நாள்

இவர்களுக்கு ஒவ்வொரு மாதத்திலும் வரும், 1,10,19,28 ஆகிய நாட்கள் மிகச் சிறந்தவை. 8 ஆம் எண்ணின் தீய கணங்களை 5 ஆம் எண் மட்டுமே போக்கும் வல்லமை படைத்தது. எனவே 5,14,23 ஆகிய நாட்களும் இவர்களுக்கு நன்மையே புரியும். எனவே கூட்டு எண் 1 மற்றும் 5 வரும் நாட்கள் மிகவும் அதிர்ஷ்டமானவை. 4,13,22,31 ஆகிய நாட்களில் நல்லவை தாமாகவே நடக்கும். ஆனால் புதிய முயற்சிகளில் இவர்கள் அந்த நாட்களில் தேடிச் செல்லக் கூடாது. 9 ஆம் எண்ணும் நல்ல பலன்களையே செய்யும். ஒவ்வொரு மாதத்திலும் 8,17,26 ஆகிய நாட்களும் 2,11, 20,29 ஆகிய நாட்களும் கெட்ட பலன்களையே கொடுக்கும். கூட்டு எண் 8 மற்றும் 2 வரும் நாட்களைத் தவிர்க்க வேண்டும்.

### அதிர்ஷ்ட இரத்தினம்

இவர்களுக்கு நீலநிற இரத்தினக் கல்லே மிகவும் அதிர்ஷ்டமானது. மேலும் லெபறாடோரிட் லாஜர்த் என்னும் கற்களையும் உபயோகப்படுத்தலாம்.

### அதிர்ஷ்ட நிறங்கள்

இவர்களுக்கு மஞ்சள் நிறமே சிறந்தது. ஆழ்ந்த பச்சை, நீலம் ஆகியவை நன்மை தரும். மற்றவர்களை சந்திக்க செல்லும் போது எப்போதும் நீலநிறம் மற்றும் மஞ்சள் நிற ஆடைகள் சிறந்தவை. கறுப்பு, பாக்குகலர் மற்றும் கரும்சிவப்பு ஆகிய நிறங்களைத் தவிர்க்க வேண்டும்.

### 8 ஆம் திகதி பிறந்தவர்கள்

இவர்கள் மிகுந்த தெய்வபக்தி உடையவர்கள். அமைதியான வாழ்க்கை உண்டு. மதப்பற்று அதிகம் உண்டு. இவர்கள் பொருளாதாரத்தில் சிறந்து விளங்குவார்கள். கற்பனை வளம் மிக்கவர்கள். நல்ல சிந்தனையாளர்கள். அடுத்தவர்களைத் தங்களது கருத்துக்களுக்கு உட்படுத்தும் திறமை கொண்டவர்கள். சமூக சேவையில் மிகவும் நாட்டம் இருக்கும். கடுமையான உழைப்பாளிகள். கடும் சாதனை புரிவார்கள். நலிவுற்றவர்களைக் கைதூக்கிவிடும் நல்ல இயல்பினர். தனித்துச் செயல்புரியும் ஆற்றல் உடையவர்கள்.

### 17ஆம் திகதி பிறந்தவர்கள்

இவர்கள் மிகுந்த சோதனைகளைச் சந்திப்பவர்கள். சலிக்காமல் உழைக்கும் இயல்பினர். எப்படியும் இறுதியில் பெருமைமிகு வாழ்க்கையை அடைவார்கள். நுண்ணிய அறிவு படைத்த சாமர்த்தியசாலிகள். ஆன்மீக வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் அரசியலிலும் நிலையான இடத்தைப் பிடித்து விடுவார்கள். இவர் கள் வறுமையான குடும்பத்தில் பிறந்தாலும் தங்கள் உழைப்பினால் பெரும் செல்வத்தைச் சம்பாதிக்கும் யோகமும் உண்டு. பணம் சேர்ப்பதில் சமர்த்தர். துணிந்து எடுக்கும் முடிவுகள் சில தோல்வியும் அடையும். இருந்தாலும் அதை வெளியே தெரியாமல் வெற்றிக்கு மாற்றும் சாதுர்யம் உண்டு. இவர்களே பெருந் திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயற்படுத்துவார்கள். தங்களுக்கு வரும் தடைகளை யும் சோதனைகளையும் துவம்சம் செய் யும் துணிவு படைத்தவர்கள்.

### 26ஆம் திகதி பிறந்தவர்கள்

பொருளாதார விடயத்தில் குறைபாடு உடையவர்கள். முன்னோர் சேர்த்து வைத்த சொத்துக்கள் விரயமாகும். பண விரயங்களும் அதிகமுண்டு. இவர்கள் அடுத்தவர்களால் அடிக்கடி ஏமாற்றம் அடைவார்கள். இருப்பி னும் மனோ தைரியம் மிக்கவர்கள். எப்போதும் உயர்வான சிந்தனைகள் நிறைந்தவர்கள். எப்படியும் உயர்ந்த பதவி/ தொழிலை அடையவேண்டும் என்று கடுமையாக உழைப்பவர்கள் இவர்கள் தான். பிறரால் அடிக்கடி வீண் பழி சுமத்தப்படுவார்கள். கற்பனைச் சக்தியும் கூர்மையான அறிவும் உண்டு. விதியின் சதியால் அடிக்கடி தோல்விகளைச் சந்திப்பார்கள். இருப்பினும் இறுதிக் காலத்தில் பொன்னும் பொரு ளும் கீர்த்தியும் கிடைத்து விடும். இவர் கள் மக்கள் அனைவரையும் எந்த வித்தியாசமின்றிச் சமமாக நேசிப்பார்கள். காதல் விவகாரங்களில் சிக்கல்கள் ஏற்படும்.

### எண் 8க்கான (சனி) தொழில்கள்

இவர்கள் கடின உழைப்பாளிகள். சனி ஆதிக்கம் குறைந்தவர்கள் கூலி யாகவும் தொழில்நுட்பவியலாளர்களாகவும் இருப்பார்கள்.

கடலை, எள்ளு, கம்பு, மலைவாழை, புகையிலை,மூங்கில், கீரைவகைகள், மரம், விறகு , கரி, எண்ணெய் வியாபாரம், உதிரிப்பாகங்கள் விற்பனையும் நன்கு அமையும். ஆடு, மாடு, கோழி போன்றவற்றை அறுக் கும் தொழில்கள், பட்டட வேலை மேஸ் திரி, தபாற்றுறை, துப்பறியும் துறை, துப்புரவுத் துறையிலும் நன்கு பிரகாசிக்கலாம். அச்சுத் தொழில், வைண்டிங் போன்றவையும் நன்கு அமையும்.

பலர் பொறுமைசாலிகள், ஆராய்ச்சியாளர்கள், கணிதம், பூகோளம், நில ஆராய்ச்சி, தத்துவம் பௌதிகம், இரும்புத் தொழில்கள் போன்றவையும் நன்கு அமையும். பிராணிகள் வளர்ப்பு, வைத்திய தொழிலும் பார்க்கலாம். விவசாய முதலாளிகளும், தொழிலாளிகளும் இவர்களே. பலர் பெரிய தொழிலதிபதிகளாகவும் வெற்றி பெறுவார்கள்.

போக்குவரத்துத் தொழில்கள் மூலம் நன்கு சம்பாதிக்கமுடியும். லொறி, பஸ்கள் நடத்துதல் மூலம் நன்கு பணம் சேர்க்கமுடியும். கார், ஆட்டோ ஓட்டுநர்களாகவும் பணி புரிவார்கள். வெளிநாடுகளில் பணி புரியும் வாய்ப்பு பலருக்கும் கிடைக்கும்.

இரும்புச் சுரங்கம், நிலத்தடியில் இருக்கும் கற்கள், சுரங்கத் தொழில்கள் போன்றவையும் ஒத்துவரும். நிலம் சம்பந்தப்பட்ட தொழிலும் வெற்றி தரும். கட்டடவேலைகள், பொறியியலாளர் பணிகள் இவர்களுக்குப் பிடித்தமானவை. கடுமையான உழைப்பை எதிர்பாக்கும் தொழில்கள்,கருவிகளை இயக்குபவர்கள் போன்றவையும் இவர்களுக்கு நன்கு அமையும்.

உழவுத் தொழிலும், எண்ணெய், இரும்புகள், லொறி வியாபாரங்கள், உதிரிப்பாகங்கள் உற்பத்தி மற்றும் விற்பனையும் இவர்களுக்கு உரிய தொழில்கள்.

சிறைச்சாலைத் துறை, மக்கள் நிர்வாகத்துறை; தோல்,செருப்பு விற்பனையும் இவர்களுக்கு நன்கு அமையும்.

(தொடரும்)





சுன்னாகம் மக்கள் வங்கியில், 50 ஆவது ஆண்டு பூர்த்தி விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முகாமையாளர் சு.இராசமனோகரன் வங்கி முன்றலில் வங்கிக் கொடியினை ஏற்றுவதனையும், அருகில் செயற்பாட்டு முகாமையாளர் சி.சிவகுமார், விருந்தினர்கள் மக்கள் வங்கியின் ஓய்வூதியர்கள், வாடிக்கையாளர்கள், வங்கி உத்தியோகத்தர்கள் ஆகியோர் நிற்பதையும் ஆறு திருமுருகன் ஆசியுரை வழங்குவதையும் அருகில் முகாமையாளர் அருட்தந்தை ரெக்ஸ் சௌந்தர், பொலிஸ் உத்தியோகத்தர், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி கோ.கணேஸ்வரன் ஆகியோர் இருப்பதையும் படங்களில் காணலாம்.

## காரைநகர் முன்பள்ளிக்கு தண்ணீர் தாங்கி அன்பளிப்பு

(யாழப்பாணம்)

காரைநகர் பிட்டியெல்லை முன்பள்ளி பாடசாலைக்கு ஐ.தே.கவின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தண்ணீர் தாங்கியொன்றினை அன்பளிப்பு செய்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இந்த முன்பள்ளி பாடசாலைக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் பாடசாலையின் குறைபாடுகள் குறித்து கேட்டறிந்தார். இதனையடுத்து தண்ணீர் தாங்கியொன்றினை அவர் நேற்று அன்பளிப்பு செய்துள்ளார்.

இதேவேளை பிட்டியெல்லை கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கு தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து ஏழு இலட்சம் ரூபாவினையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒதுக்கியுள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன் இந்த கிராமங்களுக்கு விஜயம் செய்த அவர் மக்களை சந்தித்து குறைபாடுகளை கேட்டறிந்து கொண்டார்.

தமது கிராமத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இக்கிராம மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே மின்சாரம் வழங்குவதற்கு ஏழுக இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ஏ)

## சனல் 4 காணொளி போலியானதா? தகுந்த ஆதாரத்தை முன்வையுங்கள்

### கொமின் தயாசிறி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதன் மூலம் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என சிரேஷ்ட சட்டத்தரணி கொமினி தயாசிறி தெரிவித்துள்ளார்.

சனல்-4 ஊடகத்தின் காணொளி போலியானது என்ற போதிலும் வெறுமனே அதனை நிராகரிப்பதன் மூலம் மட்டும் குற்றச்சாட்டுக்களிலிருந்து மீள முடியாது எனவும், அவற்றைப் பொய்பிக்கக் கூடிய ஆதாரங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் விரிவான விசாரணைகளை நடத்தி சர்வதேச ரீதியாக எழும் குற்றச்சாட்டுக்களை முறியடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச விசாரணைக்கு அனுமதி அளித்தல் நாட்டின் சுயாதீனத் தன்மைக்கு குந்தகம் ஏற்படக் கூடுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போரின் பின்னர் சர்வதேச சமூகத்தின் அழுத்தங்கள் அதிகரிப்பதற்கு இலங்கை தூதுவராலயங்களின் குறைபாடே பிரதான காரணியென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போர் இடம்பெற்ற காலத்தில் வெளிவிவகார அமைச்சின் பணிகளை ஜனாதிபதி நேரடியாக கண்காணித்து வந்ததாகவும் பின்னர் அந்த நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

13ஆம் திருத்தச் சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்த அனுமதிக்கக் கூடாது எனவும் அது இந்தியாவின் விருப்பத்திற்கு அமைய உருவாக்கப்பட்ட யோசனைத் திட்டமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4-2)

## மது மற்றும் புகைப்பழக்கத்தினால் அதிகளவானோர் உயிரிழப்பு

(கொழும்பு)

மது, புகைப்பழக்கத்தினால் மாதாந்தம் சுமார் 7 ஆயிரத்து 825 பேர் இலங்கையில் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அநேகமாக மாரடைப்பு மற்றும் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு பலர் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஏதேனும் காரணங்களுக்காக நாள் தோறும் 950 பேர் இலங்கையில் உயிரிழப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது சுகாதார அமைச்சர் இந்த புள்ளி விபரத் தரவுகளை வெளியிட்டுள்ளார்.

போதைக்கு முற்றுப்புள்ளி என்ற திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்த போதிலும் அதிகளவானவர்கள் மது மற்றும் புகைப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (2-4)

## நாட்டின் மின்சார உற்பத்தி விரைவில் சீரடையும் சாத்தியம்

புத்தளம் லக்விஜய மின் நிலையம் நாளை சனிக்கிழமை 9 முதல் 300 மெகா வோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய நிலையில் இருப்பதால் நாட்டின் மின்சார விநியோகம் சீரடையும் என இலங்கை மின்சார சபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் நீர்த்தேக்கங்களில் அண்மைக்காலத்தில் நீர்மட்டம் குறைந்து வருவதாலும் அனல் மின் நிலையங்களிலும் தொழில்நுட்ப கோளாறுகள் மற்றும் திருத்த வேலைகள் இடம்பெறுவதாலும் மின் உற்பத்தி குறைந்துள்ளது.

புத்தளம் லக்விஜய மின் நிலையம் கடந்த மார்ச் மாதம் முதல் மின் உற்பத்தியை ஆரம்பித்துள்ள போதிலும் செயற்பாடுகளில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினைகள் காரணமாக எதிர்பார்த்த அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-2)

## பிரித்தானிய ஊடகங்கள் இலங்கைக்கு எதிரானவை

### ராஜீவ எம்.பி. தெரிவிப்பு

த டைம்ஸ் மற்றும் சனல் 4 ஆகிய ஊடகங்கள் இலங்கைக்கு களங்கம் ஏற்படுத்தும். பிரித்தானிய ஊடகங்கள் இலங்கைக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

சில பிரித்தானிய ஊடகங்கள் வேண்டுமென்றே இலங்கை மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் புலம்பெயர் இலங்கையர்களுடன் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக த டைம்ஸ் மற்றும் சனல் 4 ஆகிய ஊடகங்கள் இலங்கைக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். செய்தியின் உண்மைத்தன்மை குறித்து ஆராயாமல் இவ்வாறான போலிச் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசாங்கம் தீவிர முனைப்புக் காட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (4-2)




★ 1099- முதலாம் சிலுவைப் போர்:- 15 ஆயிரம் கிறிஸ்தவப் போர் வீரர்கள் பட்டினியுடன் ஜெருசலேம் அருகில் சமய ஊர்வலம் சென்றனர்.

★ 1497- வாஸ்கொடகாமாவின் இந்தியாவுக்கான முதல் நேரடிப் பயணம் தொடங்கியது.

★ 1709- ரஷ்யாவின் முதலாம் பியோத்தர் போல்ட்டாவா என்ற இடத்தில் சுவீடனின் பன்னிரண்டாம் சார்ல்ஸ் மன்னனைத் தோற்கடித்தான்.

★ 1815- பதினெட்டாம் லூயி பாரிஸ் திரும்பி பிரான்சின் மன்னனானான். இரு வாரங்களே பதவியில் இருந்த நான்கு வயது இரண்டாம் நெப்போலியன் பதவி இழந்தான்.

★ 1859- சுவீடன்-நோர்வே மன்னனாக சுவீடனின் பதினைந்தாம் சார்ல்ஸ் முடி சூடினான்.

★ 1889- வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் முதலாவது இதழ் வெளியானது.

★ 1892- நியூபவுண்லாந்தின் சென் ஜோன்ஸ் நகரில் இடம்பெற்ற பெரும் தீ நகரில் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

★ 1982- ஈராக் ஜனாதிபதி சதாம் உசேன் படு கொலை முயற்சியில் இருந்து தப்பினார்.

★ 1990- ஜேர்மனி ஆர்ஜெண்டீனாவை வென்று 1990 இல் கால்பந்து உலகக் கிண்ணத்தை வென்றது.

★ 2003- சூடான் விமானம் விபத்துக்குள்ளாகியதில் 117 பேர் கொல்லப்பட்டனர். இரண்டு வயது குழந்தை ஒன்று மட்டும் உயிர் தப்பியது.

★ 2006- ம.பொ.சி.புலவர், குழந்தை ஆகியோரின் நூல்கள் நாட்டுடமை ஆக்கப்பட்டன.

### பிறப்புக்கள்

★ 1895- ஈகர் தம், ரஷ்யா இயற்பியலாளர், நோபல் பரிசுபெற்றவர் (இ.1971)

★ 1906- பிலிப் ஜோன்சன், அமெரிக்கக் கட்டடக் கலைஞர் (இ.2005)

★ 1949- ராஜசேகர ரெட்டி, ஆந்திர முதலமைச்சர். (இ.2009)

★ 1972- சௌரவ் கங்குலி, இந்தியத் கிரிக்கெட் துடுப்பாளர்.

### இறப்புகள்

★ 1695- கிறிஸ்டியான் ஹைஜன்ஸ், டச்சு கணிதவியலாளர் (பி.1629)

★ 1979- சின்-இட்டீரோ டொமனாகா, நோபல் பரிசு பெற்றவர் (பி.1906)

★ 1979- ரொபேர்ட் வூட்வேர்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி.1917)

★ 1989- வி.வி.வைரமுத்து, ஈழத்து நாடகத்துறையின் முன்னோடி, நடிகமணி (பி.1924)

★ 1994- கிம் இல்-சுங், வட கொரியத் தலைவர் (பி.1912)

★ 2007- சந்திரசேகர், 11ஆவது இந்தியப் பிரதமர் (பி.1927)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



## ஆன்மீகம் 43

“தினந்தோறும் சிறிது மது அருந்தி வந்தால், இதயநோய் வராது என்று டாக்டர்கள் சொல்லி இருப்பதாகப் படித்தேன். மது அருந்தும் போது படபடப்பு குறைந்து கவலைகள் மறந்து அமைதியாகத் தூங்குகிறேனே, அதனால் தானா?”

தினம் ஓர் ஆப்பில் என்று சொன்னவர்கள், இப்போது அதை மது என்று மாற்றிவிட்டார்களா?

மது அருந்தும் போது என்ன நடக்கிறது? உங்களுக்கு ஒரு வித ரசாயன மாற்றம் நிகழ்ந்து உங்களின் பரபரப்பைக் குறைக்கிறது. அதை அமைதி என்று நீங்கள் நினைத்துக் கொள்கிறீர்கள். ஒரு கோப்பை மது அருந்தி இவ்வளவு அமைதி வந்தால், ஒரு பீப்பாய் குடித்தால், பன் மடங்கு அமைதி வரவேண்டும் அல்லவா? வருகிறதா? உண்மையில் மது உங்களை மந்தமாக்கிறது. அதை அமைதி என்று தவறாக நினைத்து விட்டீர்கள். மற்ற நேரத்தில் அமைதியாக, கண்ணியமாக இருக்கும் பல மனிதர்கள் மது அருந்தியவுடன் செய்யும் ஆர்பாட்டத்தை நீங்கள் கவனித்தது இல்லையா? மது உள்ளே போனால் கட்டுப்பாடு இழந்து செய்யப்பட்ட குற்றங்கள் பற்றி சிறைத் தண்டனை பெற்றவர்களிடம் கேளுங்கள் சொல்வார்கள்.

“மது அருந்தினால், என் ஆயுளில் ஐந்து வருடங்கள் குறையலாம். ஆனால், ஐந்து வருடங்கள் கூடுதலாக வாழ்வதற்காக, இப்போது கிடைக்கும் சந்தோஷத்தை நான் விட்டுக்கொடுக்க வேண்டுமா?”

மரணம் என்பது எல்லோருக்கும் நிச்சயிக்கப்பட்டதுதான். ஐந்து வருடங்கள் முன்னதாக அது வருவதால், பெரிய பாதிப்பு என்று நான் சொல்லவில்லை.

ஆனால், வாழ்வது என்று எதைச் சொல்கிறீர்கள்? நினைவற்றுக் கிடப்பவர்கள் வாழ்வதாக உணர்கிறார்களா?

உங்களைப் பற்றி கவனம் உங்களுக்கு இருப்பதால் தானே வாழ்வதை உணர்கிறீர்கள்? நீங்கள் ஆழ்ந்து உறங்கும் போது உயிரோடு இருக்கிறீர்களா, இல்லையா என்பதை மற்றவர்கள் வேண்டுமானால் தெரிந்து கொள்ளலாமே தவிர, உறக்கத்தில் இருக்கும் உங்களால் புரிந்து கொள்ள முடியுமா? விழிப்பு வரும்வரை, உங்கள் அனுபவத்தில் அது மரணத்துக்கு இணையானது தானே?

எனவே, வாழ்கை என்பது விழிப்போடு இருப்பது! வாழ்வதைத் தீவிரமாக்க வேண்டுமென்றால், அது பற்றிய விழிப்பு உணர்வைத் தீவிரமாக்க வேண்டும்.

## உடல் அற்புதமான இயந்திரம்

மது அருந்தினால், தூக்கம் நன்றாக வருகிறது என்கிறீர்கள். உண்மையில், ஒரு நாளைக்கு 12 மணிநேரம் தூங்கினால், 60 வயதில், 30 வருடங்கள் உயிரோடு இருந்தீர்கள்; 30 வருடங்கள் உயிரற்று இருந்தீர்கள் என்று தானே அர்த்தம்?

“ஜாலிக்காக் குடிப்பது தப்பா? உடலுக்கு ஒய்வு அவசியம் அல்லவா?”

(b)‘பார்’ ஒன்றில் ஓர் அமெரிக்கர் நுழைந்தார்.

“நிறுத்தாமல் அடுத்தடுத்து பத்து பாட்டில் பீர் குடிப்பவர்களுக்கு 200 டாலர் பரிசு. போட்டியில் தோற்றால் நீங்கள் எனக்கு 200 டாலர் தர வேண்டும். சவாலுக்குத் தயாரா?” என்று அறிவித்தார்.

யாரும் அசையவில்லை. ஒருவர் மட்டும் எழுந்து அவசரமாக வெளியே போனார். இருபது நிமிடம் கழித்து திரும்பி வந்தார்.

“பந்தயத்துக்கு நான் தயார்” என்றார் .

அடுத்துதடுத்து பத்து பாட்டில் பீர்களை அவர் காலி செய்து முடித்ததைப் பார்த்து, அமெரிக்கர் வியந்து போனார். சொன்னபடி பரிசுத் தொகையைக் கொடுத்துவிட்டு, “ஆமாம், எதற்காக முதலில் எழுந்து வெளியே போனீர்கள்?” என்று கேட்டார் .

“பந்தயத்தில் என்னால் ஜெயிக்க முடிகிறதா என்று பக்கத்தில் உள்ள வேறொரு (b)பாருக்குச் சென்று பத்து பாட்டில் பீர் குடித்துப் பார்த்தேன்” என்றார் அவர் .

இதைப் போன்ற குடிகாரர்கள் ஒய்வுக்காகவா குடிக்கிறார்கள்? மது அருந்துபவர்கள் நல்லவர்களா, கெட்டவர்களா என்று நரன் எந்தத் தீர்ப்பும் சொல்லவில்லை. ஆனால் மது உங்களுக்கு நல்லது செய்கிறதா, கெட்டது செய்கிறதா என்று தான் கவனிக்கச் சொல்கிறேன் .

இன்னொன்றையும் புரிந்து கொள்ளுங்கள். உடலுக்கு ஒய்வு அவசியம் தான்; ஆனால், உறக்கம் அவசியமல்ல. நான் ஒரு நாளைக்கு அதிக பட்சம் நான்கு மணிநேரத்துக்கு மேல் உறங்குவதில்லை. ஆனால் என் உடல் முழுமையான ஒய்வு கிடைத்த திருப்தியுடன், முழு விழிப்பு உணர்வுடன்தான் எப்பொழுதும் இயங்குகிறது.

உடல் என்பது உங்கள் கற்பனைக்கு அப்பாற்பட்ட மிக அற்புதமான இயந்திரம். அதை எப்போதும் அமைதியாக வைத்திருந்தால் தான் அதிக திறனுடன் இயக்க முடியும். அதற்கு முழுமையான உணர்வு தேவை.

நீங்கள் கொஞ்சம் இன்பத்தை நாடித்தான் குடித்தீர்கள் என்றால், அந்த இன்பம் உங்களை மந்தமாக்காமல், அதே சமயம் அளவில்லாமல் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளதே... அதைக் கவனியுங்கள் என்று தான் சொல்கிறேன். சதா எந்நேரமும் விழிப்பு உணர்வுடன், அதே சமயம் முழுமையான இன்பத்துடன் உங்களை வைத்திருக்கும் அமுதத்தை அருந்தலாம்; ஈஷாவுக்கு வாருங்கள்!

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# எமக்கான தனித்துவம் தேடும் காலம் உருவாக வேண்டும் 01

எம்மிலும்பார்க்க பலசாலியால் நாம் பாதிக்கப்பட்டாலோ அல்லது, அடிவாங்கினாலோ எமது கோபத்தை அருகிலுள்ளவர்கள்மீது காட்டுவது பாமரத்தனமானது. இதனை ஆங்கிலத்தில் Misdirected anger என்பார்கள்.

இப்படியான பாமரத்தன்மை சமூகமட்டத்தில் பரவிவிடுகிறபோது, அந்தத்தன்மைக்கு எதிராக அறிவாளிகள் போரிட வேண்டும். அந்தப்போராட்டம் ஊடகங்களால் சமூகத்தின் மூலை முடுக்கெங்கும் எடுத்துச் செல்லப்படவேண்டும்.

இப்படி இல்லாத பட்சத்தில் மட்டரகமான அரசியல்வாதிகள் இந்த பாமரத்தன்மையை பயன்படுத்துவார்கள். இது சமூகத்திற்குப் பாரிய அழிவை ஏற்படுத்தும்.

ஆங்கிலேயரின் காலனி ஆதிக்கத்தின் விளைவாக ஏற்பட்ட பாமரத்தன்மையை அறிவு ஜீவிகள் புறக்கணித்தாலும், அதன்பின்பு மட்டரக அரசியல்வாதிகள் சாமானிய மக்களின் மனதில் அந்த நஞ்சாக மாற்றியதால் அந்த நஞ்சு ஒரு சமூகத்தையே அழித்து விடுவதை நாம் இன்னமும் அறிந்து கொள்ளத் தவறிவிடுகிறோம்.

இயற்கை அனர்த்தங்கள் வர்க்க வேறுபாடு பார்ப்பதில்லை. எனினும் இப்பாதிப்பு அடிமட்ட மக்களையே அதிகம் பாதிக்கிறது. சுனாமியில் அதிகம் அழிந்தவர்கள் அன்றாடக் காச்சிகளான மீனவர்களே. மழை வெள்ளத்தில் மிதந்து போவது குப்பத்துக் குடிசைகளே இதேபோல் போர் அனர்த்தத்தில் இலங்கையில் அதிகம் பாதிக்கபப்ட்டவர்கள் சாமானிய தமிழர்கள் மட்டுமல்ல சாமானிய சிங்கள வர்க்கத்தினரும்தான். இவர்களிலிருந்துதான் முடமான இராணுவத்தினர் வந்தார்கள்; பலர் இறந்தார்கள். ஆங்கிலம் தெரிந்தவர்கள்தான். அறிவாளிகள் என்ற ஒரு விடயம்

> “கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை”

காலங்காலமாக இலங்கை இந்தியா போன்ற பிரித்தானியாவால் ஆளப்பட்ட நாடுகளில் சுதந்திரத்துக்குப் பின்னும் இருந்து வருகிறது. இதைத் தொடர்ந்து வலியுறுத்துவது போல் மக்கள் மத்தியில் செல்லும் கலாசார ஊடகங்களான சினிமாப்படங்களில் பட்டிக்காட்டுக் கதாநாயகன் பணக்காரக் கதாநாயகியால் புறக்கணிக்கப்பட்டு வந்தாலும், கடைசியில் ஆங்கிலம் பேசும்போது அவன் படித்த புத்திசாலியாக கருதப்பட்டு அந்தக் கதாநாயகியால் காதலிக்கப்படுவான்.

தர்க்கரீதியாக ஏற்றுக்கொள்ளாத விடயங்கள்கூட ஊடகங்களால் சமூகத்தில் பரப்பப்படும்போது சாதாரண மக்கள் மத்தியில் அந்த விடயங்கள் கருத்தியலாக மாறுகிறது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் தாய் மொழி விருத்தியடையாமல் ஆங்கிலம் சகல மேற்தட்டு மக்களாலும் அத்துடன் மேல்தட்டை அடைய விரும்பும் கீழ்த்தட்டு மக்களாலும் மோகிக்கப்படும் போது, எப்படித் தாய்மொழி அபிவிருத்தி அடையும்?

**நடேசன்-அவுஸ்திரேலியா**

முக்கியமாக ஒரு மொழி தொடர்ந்து இருப்பதற்குத் தேவையான விடயங்கள்

1. மொழிக்குரிய கௌரவம் அந்தமொழி பேசும் சமூகத்தவரால் கொடுக்கப்படல் வேண்டும்.

2. அறிவான விடயங்கள் அந்த மொழியில் உருவாக்கப்படல் வேண்டும்.

3 மொழிக்கு அதிகாரம் கொடுக்கப்படல் வேண்டும்.

4. கல்வித் திட்டத்தில் அம்மொழி உள்ளடக்கப்படல் வேண்டும்.

5. எழுத்துமூலம் உருவாக்கப்படவேண்டும்.

6. தற்காலத்தில் இலத்திரன் ஊடகங்களில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

முக்கியமாக முதலாவது விடயமான கௌரவம் எப்பொழுது கொடுக்கப்படல் வேண்டும்?

அரசியல்வாதிகள் மொழியைப் போற்றிப் பேசியோ, மகாநாடு வைத்தோ மொழியை வளர்க்க முடியாது. மொழியியலாளர் ஆராய்ச்சியின் படி குழந்தைகள் ஐந்து அல்லது ஆறுவயதில் மொழிபேசத் தொடங்கும்போது அந்த மொழிக்குக் கௌரவம் கொடுக்கவேண்டும். ஆனால், அந்த வயதில் நாம் எந்த மொழிக்கு கௌரவம் கொடுத்தோம்? இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் ஆங்கிலம் கற்பிக்க ‘கொன் வென்ற்’றுகளுக்கும், ரியூசன்களுக்கும் அனுப்பி, ஆங்கிலத்துக்கு மரியாதை கொடுத்துவிட்டு ஹிந்தி மீதும் சிங்களத்தின் மீதும் கசப்பை உருவாக்க முயற்சித்தோம்.

*(தொடரும்)*

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# யாழ். மாவட்டத்துக்கான ஆழ்கடல் மீன்பிடித்துறையின் அபிவிருத்தியும் எதிர்நோக்கும் சவால்களும்

ஆழ்கடல் மீன்பிடியினைப் பற்றிக் கூறும் போது அதனுடன் மிக நெருங்கிய தொடர்புடைய துறைமுக வசதி பற்றி எடுத்தியம்பலும் அவசியமாகிறது. மீன்பிடித்துறைமுகம் எவ்வாறு அமைய வேண்டும். அங்கு என்னென்ன வசதிகள் காணப்படல் வேண்டும் என அவதானிப்பதும் மிகப் பொருத்தமானதாயிருக்கும்.

அறுவடை செய்யப்படும் மீன்களுக்கும் அவற்றின் நுகர்தலுக்கும் இடையே தொழிற்படுகின்ற மையமாக மீன்பிடித்துறைமுகத்தை நோக்கலாம். ஓர் மாதிரி மீன்பிடித்துறைமுகமானது மீனை குளிரூட்டி பாதுகாக்கும் வசதிகள், மீன்பதனிடும் வசதிகள், பனிக்கட்டி உற்பத்தி செய்யும் வசதிகள், நிர்வாக அலகு மற்றும் ஏனைய வசதிகளைக் கொண்டிருந்தல் அவசியமாகும்.

அவையாவன:- எரிபொருள் வழங்கும் நிலையும், படகு திருத்தும் அலகு, கப்பல் சறுக்குத்தடம், படகுகளை சீர்செய்யுமிடம், போக்குவரத்துக்கான பாதைகள், தனியார் வர்த்தக வாகனங்களுக்கான தரிப்பிடம், இறக்க ஏற்ற வசதியான, அகலமான கட்டடம், வலை திருத்தும் மன்றம், எதிர்காலத் தேவைகளுக்கு விரிவாக்கத்துக்கான இடங்கள் என்பனவும் துறைமுகத்தில் காணப்படல் அவசியம்.

தற்போது யாழ்ப்பாணத்தில் சிறந்த துறைமுக வசதிகள் எதுவும் காணப்படவில்லை. வடக்கின் வசந்தத்தின் கீழும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களின் அபிவிருத்தித் திட்டங்களின் கீழும் துறைமுகம் அமைத்தல், சீர்செய்தல் உள்ளடக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஆழ்கடல் மீன்பிடியின் அபிவிருத்தியினை நோக்குமிடத்து அதற்கான இலக்கினை அடைவதில் எதிர்நோக்கும் சவால்களையும் ஆராய்தல் அவசியம். எதிர்நோக்கும் சவால்களுள் மிகப் பிரதான மானது மூல்தனச் செலவு. ஒரு பல நாட்படகு கொண்டுள்ள மீன்பிடி உபகரணங்கள் மற்றும் மற்றைய துணைக்காரணிகளுக்குமான செலவானது அண்ணளவாக 15 மில்லியன் ரூபாவாகும். இன்றைய காலகட்டத்தில் எமது மீனவர்களால் பண உதவியின்றி ஒரு புலநாட் படகினை கூட சொந்தமாக வைத்திருக்க முடியாத சூழ்நிலையே உள்ளது.

அடுத்தபடியாகத் துறைமுக வசதியை நோக்கினால் காரைநகர் கடற்தளப் பரப்பிலுள்ள துறைமுகமானது மிகவும் பொருத்தமாக இருந்தாலும் பலநாட்படகுகளின் எண்ணிக்கை அதிகரீக்கும் போது இத்துறைமுகம் தொடர்ந்து பாவிப்பதற்கு சாத்தியமாகாது. மயிலிட்டியில் காணப்படும் ஒரேயொரு மீன்பிடித்துறைமுகமானது அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளதால் கடந்த 20 வருடங்களாகப் பாவனையில் இல்லாமல் உள்ளது. இத்துறைமுகத்தை முழுமையாகப் புனரமைப்புச் செய்து பாவனைக் குட்படுத்துவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

எமது பிரதேசத்தில் கப்பலோட்டமும் மாலுமி சாஸ்திரத்திலும் பயிற்றுவிக்கப்பட்ட ஆளணியினர் இல்லாமை ஆழ்கடல் மீன் பிடியில் ஒரு பெரும் குறைபாடாகும். தற்போது பல நாட்கலன்களை இயக்க இலங்கையின் தென் பகுதியிலிருந்து படகோட்டிகள் வருவிக்கப்படும் நிலைமை காணப்படுகிறது.

படகோட்டிகளை பயிற்றுவிப்பதற்கான சில ஆயத்தங்கள் தற்போது யாழ். மாவட்ட மீன் பிடியியல் மற்றும் கடல் எந்திரவியல் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. படகோட்டிகளைப் பயிற்றுவிப்பதில் யாழ்.மாவட்ட மீன்பிடியியல் மற்றும் கடல் எந்திரவியல் கல்லூரி, யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல் துறை, தேசிய நீர்வாழ்வள ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகம் NARA என்பன இணைந்து செயற்படலாம்.

போர்ச்சூழலால் பாதிக்கப்பட்டிருந்தமையோ, என்னவோ எம் குடாநாட்டு மீனவர்கள் ஆழ் கடல் மீன்பிடியைத் தொடர்வதில் தயக்கம் காட்டுகின்றனர். தத்தமது குடும்பங்களை விட்டு கடலில் பலநாட்கலங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதை விரும்பான்மையே அதிகம் காணப்படுகின்றது.

இவை எல்லாவற்றிலும் மேலாக சந்தைப் படுத்தல் வசதிகளை அவதானித்தல், தற்போது ஏ9 பாதை பாவனைக்கு வந்துள்ள நிலையில் பலநாட்கலங்களில் பிடிக்கப்படும் விளைச்சல்கள் கொழும்பில் சந்தைப்படுத்துவதற்காக குளிரூட்டப்பட்ட வாகனங்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன. வடபகுதியில் சந்தைப்படுத்தும் விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

அப்போது தான் வடபகுதி மக்களுக்கு மீன் உணவு கிடைத்தல் உறுதிப்பத்தப்படுவதுடன் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பையும் பெற்றுக்கொடுக்க முடியும்.

இன்று பெரும்பாலான சிறுவர்களில் புரதச்சத்துக்குறைபாடு காணப்படுகின்ற போதிலும், வடபகுதி புரதத் தேவையில் தன்னி றைவு அடையாமலே பிறமாவட்டங்கள் அல்லது வெளிநாடுகளிற்கு பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஏற்றுமதி செய்யப்படுதல் ஆனது துர்அதிர்ஷ்டவசமான ஒன்றாகும். இதனை பொறுப்பானவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சந்தைப்படுத்தலை ஏற்படுத்த வசதியாக இறங்கு துறையிலிருந்து நகரப் பகுதிக்கான தெருக்கள் மற்றும் பிரதான தெருக்கள் குன்றும் குழியுமின்றி மறுசீரமைக்கப்படல் வேண்டும். வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கவனம் இத்தெருக்களைப் புனரமைப்பதில் செலுத்தப்படல் இன்றிமையாதது.

யாழ். மாவட்டத்தை பொறுத்தவரையில் பருத்தித்துறைக் கடற்பரப்பில் இந்தியாவின் இழுவைப் படகுகள் எம்நாட்டு எல்லைக்குள் வந்து வளங்களைச் சுரண்டிச் செல்வது ஒரு நீண்ட காலப் பிரச்சினையாக இருந்து வருகிறது.

போரால் பாதிக்கப்பட்ட மீனவர்களது வசதிக்குறைவும்தொழில்நுட்பவசதிக்குறைவும் இச்சுரண்டலுக்கு மேலும் மெருகூட்டியுள்ளன எனலாம். இருநாட்டு அரசும் தகுந்த தலைமை நிர்வாகிகளும் இச்சுரண்டலை நிறுத்துவதில் அக்கறையுடன் பாரபட்சமற்ற நிடுநிலையான ஸ்தானத்தில் செயற்படல் அவசியம்.

மேற்குறிப்பிட்ட சவால்களை முறியடிப்பது மட்டுமின்றி ஆழ்கடல் மீன்பிடி அபிவிருத்தி நிகழும் அதேவேளை நிலைத்து நிற்கக் கூடிய முகாமைத்துவம் பற்றியும் சிந்தித்துச் செயற்படல் அவசியம். நிலைத்து நிற்கக் கூடிய முகாமைத்துவத்தினைப் பேணுவதில் உயிர்ப்பல்வகைமைப் பாதுகாப்பும் சூழலியலுக்குரிய சமூகப் பாதுகாப்பும் இன்றியமையாதது.

உயிர்ப்பல்வகைமை எனப்படுவது ஓர் குறிப்பிட்ட வாழிடத்தில் பல்வேறுபட்ட உயிரினங்கள் சமநிலையில் வாழ்வதாகும். உயிரினங்கள் சமநிலையில் காணப்படவேண்டுமாயின் சூழல் தொகுதி சமநிலையில் இருத்தல் வேண்டும். மீன்களை அறுவடைசெய்தல் அதியுயர் பேண்தகு விளைச்சலுக்கப்பால் நிகழாமல் பேணப்படல் வேண்டும். அப்போதுதான் நிலைத்து நிற்கக்கூடிய முகாமைத்துவத்தின் சிறப்பியல்பினை உணர முடியும்.

மேலும் உயிர்ப்பல்வகைமை பாதிப்பானது உணவு வலையில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் மீன்வளம் குறைவடையக் காரணமாகின்றது. யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உயிர்ப்பல்வகைமைப் பாதிப்பானது சிறுகைத்தொழில், சந்தைக் கழிவுகள், நன்கு பராமரிக்கப்படாத வைத்தியசாலைக் கழிவுகள், மாநகரசபைக் கழிவுகள் கடலினுள் விடப்படுவதாலும் கடல் வாழ் உயிரினங்களின் இனப்பெருக்க இடமான கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுவதாலும் மண் அகழ்வினாலும் ஏற்படுத்தப்படுவதை அவதானிக்க கூடியதாயுள்ளது. பொருத்தமான நிறுவனங்களில் பொறுப்புள்ள பதவிகளை வகிக்கும் நிர்வாக உத்தியோகத்தர்கள் இக்கழிவுகளை சரியான முறையில் சூழலுக்கு விடப்படுதலை உறுதி செய்வதுடன் சீரான கழிவு முகாமைத்துவத் திட்டங்களை மக்களிடையே அறிமுகப்படுத்துதல் இன்றியமையாததாகும். உயிர்ப்பல்வகைமைப் பாதுகாப்பு, சூழலியலுக்குரிய சமூகப் பாதுகாப்பு என்பவற்றை அமுல்படுத்தும் போது ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களில் இதுவரை காலமும் நடந்தேறிய ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை அதிகசிரத்தையுடன் கவனத்திற்கொண்டு அங்கு குறிப்பிட்ட சிபார்சுகளின் அடிப்படையில் முகாமைத்துவத் திட்டங்களை தோற்றுவித்தலும் நடைமுறைப்படுத்தலும் அவசியம். அப்போது நாம் எதிர்பார்க்கும் நிலைத்து நிற்கும் மீன்பிடியானது சாத்தியமாகிறது. அதாவது எமது எதிர்கால சந்ததியினருக்கு மீன்வளமானது தொடர்ச்சியாக கிடைக்க வாய்ப்பேற்படுகின்றது. நீண்டகால நோக்கில் மீன்பிடி அபிவிருத்தித் திட்டமானது மீன்பிடியில் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளின் அடிப்படையில் வகுக்கப்படலாம். இதன்போது பின்வருவன கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

1. காணப்படும் வளங்களின் இயல்பு- அவற்றின் இடம், காணப்படும் நேரம், காணப்படும் அளவு என்பன

2. மிக வினைத்திறன் வாய்ந்த பொருளாதார முறைகளை வளங்களைப் பெறுவதில் பயன்படுத்தல்

3. கரையோர மீன்பிடிக் கலங்களை அவதானிக்கும் தொகுதிகளை அமைத்தல்

4. வினைத்திறனான கொள்வனவு செய்யும், பாதுகாக்கும், பதனிடும், சந்தைப்படுத்தும் தொகுதியைத் தோற்றுவித்தல்

5. மீன்கள் பிடிப்பதையும் அவற்றின் குடித்தொகை அளவையும் விஞ்ஞான ரீதியாக அவதானித்தல்

6. மனிதவள மேம்பாட்டை கட்டியெழுப்ப பயிற்சி, அறிவூட்டல், செய்முறைகளை நடத்துதல்.

7. மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கும், பாடசாலை மாணவருக்குமிடையே விழிப்புணர்வைக் கட்டியெழுப்புதல்

கலாநிதி திருமதி சிவசாந்தினி குகநாதன்
இணைப் பேராசிரியர்,
விலங்கியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்.

மேலே குறிப்பிட்ட அங்கீகாரங்கள் மூலம் நிலைத்து நிற்கக்கூடிய யாழ்.மாவட்ட ஆழ்கடல் மீன்பிடி அபிவிருத்திக்கு பொருத்தமான நிறுவனங்கள், அமைப்புக்கள், ஒன்றிணைந்து செயற்படுமேயானால் சாதகமான விளைவுகளை பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கலாம். (தொடரும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 44

RNA இன் மூன்று வகைகள் யாவை?

விடைகளை 18.07.2011 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

Mr.S.Ketheeswaren
Editor, Section A
Jaffna Science Association
Library
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 43 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

திரு.த.யேவேந்தன்
இலக்கம் 111,
உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

**புதிர் 43 இற்கான கேள்வியும் விடையும்:**

உருக்கு (Steal) என்பது எவற்றின் கலப்புலோகம் ஆகும்?

விடை:- இரும்பு, காபன்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 44

| | |
|---|---|
| சரியான விடை | :.................................... |
| முழுப்பெயர் | :.................................... |
| முகவரி | :.................................... |
| | :.................................... |
| தொ.பே. இல | :.................................... |
| கையொப்பம் | :.................................... |

**08)** 1)  இங்கு அமர்ந்திருப்பவரின் நிலை யாது?

(..................................)

2)  இங்கு காட்டப்பட்டுள்ள முகம் வெளிப்படுத்தும் உணர்வு யாது?

(..................................)

3)  இச் செயல் நீர் விரும்பும் செயல்களில் ஒன்றா? (ஆம் / இல்லை)

(..................................)

(03 புள்ளிகள்)

**09)** கீழே தரப்பட்டுள்ள மீன் உருக்களில் எண்கள் குறிக்கப் பட்டுள்ளன. அவற்றை அவதானித்து, அதன் கீழ்வரும் வினாக்களில் மீன்களால் குறிக்கப்பட்டுள்ள எண்களை இனங்கண்டு விடை தருக.





1)  இவ்வெண்ணை எழுதுக.

(..................................)

2)  இவ்வெண்ணிலிருந்து 312 எனும் எண்ணைக் கழித்து எழுதுக.

(..................................)

3)  எனும் எண்ணைச் சொற்களில் எழுதுக.

(..................................)

4) தரப்பட்டுள்ள இலக்கங்களினால் ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண் யாது?

(..................................)


5) நீர் ஆக்கிய மிகப் பெரிய எண்ணிலிருந்து 1234 எனும் எண்ணைக் கழித்து எழுதுக.

(..................................)

(10 புள்ளிகள்)

**10)** கீழ்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.


i) இச்சதுரத்தின் பரப்பளவு யாது?

5cm  5 cm

(..................................)

ii) iii + iv என்பதைக் கூட்டி எழுதுக.

(..................................)

iii) 6cm  5cm இவ்வுருவின் சுற்றளவு யாது?

(..................................)

iv) உமது கணித உபகரணப் பெட்டியில் உள்ள 15cm நீளமுள்ள அடிமட்டத்தினால் ஆசிரியரின் மேசையினை அளந்தபோது 8 அடிமட்டங்கள் அளவு காணப்பட்டது. எனவே, ஆசிரியர் மேசையின் மொத்த நீளம் யாது?

(..................................cm)

v) வைத்தியரினால் உமக்கு வழங்கப்பட்ட 45m*l* பாணி மருந்தினை 5m*l* அளவு கரண்டியினால் தினமும் மூன்று வேளை அருந்துவீராயின், அம்மருந்தினை எத்தனை நாட்களுக்கு அருந்த முடியும்?

(..................................)

vi) 400g பால்மாவினை 100g கொண்ட 4 பொதிகளில் அடைக் கலாம் எனின், 1kg பால்மாவினை 100g கொண்ட எத்தனை பொதிகள் செய்யலாம்?

(..................................)

(12 புள்ளிகள்)

**11)** பின்வரும் வினாக்களுக்கான விடைகளைப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.




i) இவ்உபகரணத்தின் பெயர் அல்லது பொறிமுறை யாது?

(..................................)




ii) இப்பரிசோதனை (..................) (நீரின் / வளியின் / பஞ்சின்) இயல்பைக் கண்டறி வதற்காகச் செய்யப்படுகின்றது. (இடை வெளிக்குப் பொருத்தமானதை எழுதுக.

(..................................)



iii) இந்த உபகரணத்தின் பெயர் யாது?

(..................................)




iv) இங்குள்ள மீன் படத்தில் மீன் நீந்திச் செல்வதற்கு துடுப்பாகப் பயன்படும் செட்டையைக் குறிக்கும் ஆங்கில எழுத்து எது?

(..................................)



v) தையல் கலையோடு தொடர்புடைய இக்கருவியின் பெயர் யாது?

(..................................)

(05 புள்ளிகள்)

**12)** கீழே தரப்பட்டுள்ள தமிழ்ச்சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

i) வெண்கட்டி - ..................................
ii) வகுப்பறை - ..................................
iii) விமான நிலையம் - ..................................
iv) பலூன் - ..................................

(08 புள்ளிகள்)

**13)** இங்கு தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்க் கருத்துச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i) Bottles - ..................................
ii) Captain - ..................................
iii) Railway - ..................................
iv) Postman - ..................................

(08 புள்ளிகள்)

**14)** கீழே ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1) அமைதியாக / கொண்டிருந்தது / ஓடிக் / கங்கை / மாணிக்க

(..................................................................)

2) நின்றனர் / எல்லோரும் / வானத்தைப் / கொண்டு / பார்த்துக்

(..................................................................)

(04 புள்ளிகள்)

**15)** கீழ்வரும் சிங்களச் சொற்களுக்கான தமிழ்ச்சொற்களைத் தருக.

1) பொல - ..................................
2) பு(த்)தா - ..................................
3) லொ(க்)கு - ..................................

(03 புள்ளிகள்)

**16)** சங்கரின் வீட்டைச்சுற்றி எண்ணற்ற கொய்யா மரங்கள் காய்த்துப் பழுத்திருந்தன. பழுத்த கொய்யாப் பழங்களை உண்பதற்காக ஏராளமான பறவைகள் வந்த வண்ணமிருந்தன. ஒருநாள் அங்கு வந்திருந்த கொண்டைக் குருவியைப் பிடித்துத் தொட்டுப் பார்க்க சங்கர் ஆசைப்பட்டான்.

மேலே ஒரு சம்பவம் ஆரம்பித்து விடப்பட்டுள்ளது. மேலும் யாது நிகழ்ந்திருக்கும் என கற்பனை செய்து, இந் நிகழ்வினைத் தொடர்ந்து 6 வாக்கியங்கள் எழுதுக.

i) ..................................................................
ii) ..................................................................
iii) ..................................................................
iv) ..................................................................
v) ..................................................................
vi) ..................................................................

(12 புள்ளிகள்)

# ஈழத்துத் தமிழ்ப் புலமையின் அடையாளமாக திகழ்ந்தவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி

## துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி நேற்று முன்தினம் கொழும்பில் இயற்கை எய்தியதை அறிந்து மிகவும் துயரமடைந்தேன் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள செய்தியில்,

ஈழத்துத் தமிழ்ப் புலமையின் அடையாளங்களில் ஒருவராகத் திகழ்ந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெருமையை தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் கொண்டு சேர்த்து நிலைநிறுத்தியதில் பெரும் பங்கு வகித்தார்.

எமது பல்கலைக்கழகத்தில் நுண்கலை மற்றும் நாடகமும் அரங்கியல் ஆகிய புலமைத் துறைகளை உருவாக்கி தனித்த பயில் துறைகளை வடிவமைப்பதில் அன்னார் பெரும் பங்காற்றினார். நுண்கலைத்துறை, நாடகமும் அரங்கியல் மற்றும் தமிழ்த்துறையின் புலமைசார் அபிவிருத்தியில் அன்னாரின் பங்களிப்பு சொல்லத்தக்கது.

தமிழியலின் பல்வேறு புலங்களிலும் ஆழ்ந்த புலமை கொண்ட பேராசிரியர் கா.சிவத்தம்பி தமிழ் திறனாய்வுப் புலத்திற்கு மறைந்த பேராசிரியர் க.கைலாசபதியுடன் இணைந்து வலுவான அடித்தளமிட்ட பெருமைக்குரியவர்.

தனது புலமைசார்ந்த எழுத்துக்களால் உலகளாவிய நிலையில் நிரம்பிய வாசகர்களைத் தம்வசம் வரித்துக் கொண்டிருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பீடச் சபை, மூதவை மற்றும் பேரவைகளின் மதிப்பார்ந்த உறுப்பினராக இருந்து எமது பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் பௌதீக வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பை அன்னார் வழங்கினார்.

2010 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மகாநாட்டின் ஆராய்ச்சி அமர்வுக்கு பொறுப்பாகப் பேராசிரியர் கா.சிவத்தம்பியை தமிழக அரசு நியமனம் செய்ததை ஈழத்துத் தமிழ்ப் புலமைக்கு கிடைத்த மிகப் பெரும் கௌரவமாகப் பார்க்கப்பட்டதை எவரும் மறுதலிக்க முடியாது.

இயற்கை எய்தும் வரை தமிழராய்ச்சியுடன் தன்னை இறுக இணைத்துக் கொண்டிருந்த பேராசிரியர் எமது பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் அர்ப்பணிப்புடனான பெரும்பங்கினைக் கொண்டிருந்தார். பேராசிரியரை இழந்து வாடும் அன்னாரது குடும்பத்தினர் மற்றும் தமிழ் அபிமானிகளது துயரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் உரிமையுடன் பங்கெடுத்துக் கொள்கின்றது. தன்னுடைய புலமைசார்ந்த எழுத்துக்களால் சாகாவரம் பெற்றுள்ள பேராசிரியரது ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.



# பேராசிரியர் கா.சிவத்தம்பியின் மறைவு ஈடுசெய்ய முடியாதது

## யாழ்.பல்கலை நுண்கலைத்துறையினர் இரங்கல்

பேராசிரியர் சிவத்தம்பி எமது நுண்கலைத் துறையின் தலைவராக 1984-1995 காலப் பகுதியிலிருந்து இத்துறையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது என யாழ். பல்கலையின் நுண்கலைத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், கலை வரலாற்றும் அழகியலும், நாடகமும் அரங்கக் கலைகளும் ஆகிய இரண்டு கற்கை நெறிகளையும் உள்ளடக்கிய நுண்கலைத் துறையானது பேராசிரியரின் தலைமைத்துவத்தின் கீழ் முதன்மைத் துறையாக வளரத் தொடங்கி இன்று செயற்பாடுமிக்க துறையாக விளங்குகின்றது.

அன்னாரின் இழப்பு எம்மால் ஈடுசெய்ய முடியாததொன்று. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். (4-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(கரவெட்டி)

வெளிநாடுகளிற்கு அனுப்புவதாக பல இலட்சம் ரூபா பணமோசடி செய்த முக்கிய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வல்வெட்டித்துறை பிரதேசத்தில் பலரிடம் ஐரோப்பா நாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி பல இலட்சம் ரூபா மோசடி செய்த முக்கிய நபரை வல்வெட்டித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர் வல்வெட்டித்துறை நெடியகாட்டுப் பகுதியைச் சேர்ந்த இருவரிடம் பண மோசடி செய்துள்ளார்.

இதில் 4 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா ஒரு நபரிடமும், 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா மற்றொரு நபரிடமும் மோசடி செய்ததுடன் உடுப்பிட்டி வீதி தொண்டைமானாறு பகுதியை சேர்ந்த ஒருவரிடம் 4 இலட்சம் ரூபாவும் பண மோசடி செய்துள்ளார்.

மூவரும் கொடுத்த முறைப்பாட்டையடுத்து சந்தேக நபரை வல்வெட்டித்துறை பொலிஸார் நேற்று முன்தினம் புதன் கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்த சேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி சந்தேக நபரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4-24)

* * * * * *

(கரவெட்டி)

போலி தங்க நகைகளை அடகு வைத்த சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

வடமராட்சி நெல்லியடி சம்பத் வங்கியில் போலி தங்க நகைகளை அடகு வைத்து 3 இலட்சத்து 49 ஆயிரத்து 420 ரூபாவை பண மோசடி செய்த சந்தேக நபரை நெல்லியடி பொலிஸார் கடந்த 5 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

சம்பத் வங்கி முகாமையாளர் கொடுத்த முறைப்பாட்டையடுத்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதியில் வசிக்கும் முக்கிய நபரை நெல்லியடி பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர் படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி சந்தேக நபரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4-24)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும், மதுபோதையிலும் வாகனத்தை செலுத்திய இரு குற்றச்சாட்டின் பெயரில் நபரொருவர் யாழ். பொலிசாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத குற்றச்சாட்டிற்கு 2500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டிற்கு 6 ஆயிரம் ரூபாவும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

வாகனங்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனத்தை வேகமாக செலுத்திய குற்றச்சாட்டின் பெயரில் ஒருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 4 ஆயிரம் ரூபா அபராத மும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித் தார். (4-3)

* * * * * *

(கிளிநொச்சி)

வயது முதிர்ந்த பெண்மணி ஒருவரின் கழுத்தில் இருந்த 24 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்த மூன்று நபர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய் தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் மேற்குறித்த மூன்று நபர்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4-3)

# சர்ச்சைக்குரிய எரிபொருளை அகற்றி புதிய எரிபொருள் விநியோகிக்கப்படும்

## பெற்றோலியவள அமைச்சு அறிவிப்பு

சர்ச்சைக்குரிய 20 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல், எரிபொருள் நிலையங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர்களின் பயன்பாட்டிற்காக புதிய எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் பெற்றோலிய வள அமைச்சு அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

பாவனையாளர்கள் எவ்வித அச்சமுமின்றி இப் பெற்றோலை பயன்படுத்த முடியும் எனவும் புதிய தொகுதி பெற்றோலை நாடு முழுவதிலும் விநியோகிக்கும் பணி நடைபெறுவதாகவும் அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவின் பணிப்புரைக்கமைய பழைய தொகுதி பெற்றோல் எரிபொருள் நிலையங்களிலிருந்து அகற்றப்பட்டு சோதனைக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன களஞ்சியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக பெற்றோலிய வள அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-2)

# எலிக்காய்ச்சல் நோயால் — 56 பேர் உயிரிழப்பு —

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 56 பேர் உயிரிழந்துள்ளமை பதிவாகியுள்ளது.

கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு குறிப்பிடுகின்றது. அந்த மாவட்டத்தில் 11 மரணங்கள் பதிவாகியுள்ளன.

அத்துடன் குருநாகல், களுத்துறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் அதிக எண்ணிக்கையானோர் எலிக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை நான்காயிரத்து 374 பேர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குருநாகல் மாவட்டத்திலேயே அதிகளவானவர்கள் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (4-2)

# கரைத்துறைப்பற்று மக்கள் விரைவில் மீள்குடியேற்றம்

## முல்லை. அரச அதிபர் அறிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெயர்ந்த மக்களை எதிர்வரும் 12 ஆம் திகதி மீள் குடியமர்த்தப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.பத்திநாதன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக் கேணி கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்கள் தமது பதிவினை செம்மலை மத்திய மகா வித்தியாலத்தில் மேற்கொள்ளமுடியும். குமாரபுரம், செம்மலை கிழக்கு கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுமக்களுக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

நிரந்தர இடங்களுக்குச் செல்லவிரும்புவர்களும், நண்பர்கள் உறவினர்களுடன் தங்கியுள்ள குடும்பங்களும் தமது நிரந்தர இடங்களுக்கு செல்லும் ஆதாரங்களுடன் இதுவரை காலமும் தங்கியிருந்த கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தினை அப்பகுதி உதவி அரசாங்க அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு மேலொப்பமிடப்பட்டு விடுபுக்கழகம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# அம்பாந்தோட்டை அபிவிருத்தியில் யானைகளுக்கு பெரும் பாதிப்பு

பொது நலவாய விளையாட்டு விழாவுக்காக புதிய விமான நிலையம் மற்றும் பாரிய விளையாட்டு நகரத்தை அமைப்பதற்காக 200 காட்டு யானைகளை இடமாற்றம் செய்யவுள்ளதாக கமநல சேவைகள் மற்றும் வனஜீவராசிகள்துறை அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார். இவ்விளையாட்டு விழாவை அம்பாந்தோட்டையில் நடத்தும் உரிமையைப் பெறுவதற்கு இலங்கை முயற்சித்து வருகிறது. அதற்கான உரிமை கிடைத்தால் தேசிய விலங்குகளின் சரணாலயத்தின் எல்லைப் பகுதியிலுள்ள இடங்களில் விளையாட்டு நகரத்தை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதால் அங்குள்ள 200 யானைகள் அம்பாந்தோட்டையிலிருந்து 60 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் மொனராகலை வேரகலவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

ஆனால், இது யானைகளின் இயற்கை வாழ்க்கை முறையைப் பாதிக்கும் என்பதால் இத்திட்டத்தை தான் கடுமையாக எதிர்க்கப் போவதாக இலங்கை சூழல் பாதுகாப்பு குழுவொன்று கூறியுள்ளது.

இலங்கை பசுமை இயக்கத்தைச் சேர்ந்த பன்டுரங்க காரியவசம் இது குறித்து தெரிவிக்கையில், இலங்கை ஏற்கனவே புதிய விமான நிலையம் ஒன்றையும் யானைகள் வசிக்கும் பகுதிக்கூடாகச் செல்லும் விமான ஓடுபாதை ஒன்றையும் அமைக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தார்.

இந்த விளையாட்டு நகர நிர்மாணத்தினால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாகவும் காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார். 2018 இல் இலங்கையில் பொது நலவாய விளையாட்டுவிழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

## திரிபியூன் ஆசிரியருக்கு எதிராக சுவீடன் நீதிமன்றம் தீர்ப்பு

உலகின் முன்னணி செல்வந்தர்களில் ஒருவரான மலேசிய தமிழர் விஜய் ஈஸ்வரன் என்பவர் தொடர்பாக அவதூறான செய்திகளை பிரசுரித்தார் என்கிற வழக்கில் ஏசியன் திரிபியூன் ஆங்கில இணையத்தள பத்திரிகையின் ஆசிரியர் கே.ரி. இராஜசிங்கம் சுவீடனின் நெட்டாலி மாவட்ட நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டு உள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அபாண்டமாக தொடர்புபடுத்தி அவதூறுச் செய்திகளை வெளியிட்டமைக்காக நீதிமன்றம் குறிப்பிடுகின்ற தொகையை ஈஸ்வரனுக்கு இராஜசிங்கம் நஷ்டஈடாக வழங்க வேண்டும் என்று விசேட நீதிபதிகள் குழு தீர்ப்பளித்து உள்ளது.

ஏசியன் திரிபியூன் நிறுவனம் சுவீடனை தளமாகக் கொண்டு வெளிவருவதால் இவ்வழக்கு அங்கு தாக்கல் செய்யப்பட்டது. (4-2)

## லசந்தவின் படுகொலைச் சம்பவத்தில் இராணுவ வீரர் ஒருவருக்கு தொடர்பு

கந்தேகெதர பியவன்ச என்ற இராணுவ் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தருக்கும் சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் அமரர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைச் சம்பவத்திற்கும் இராணுவ உத்தியோகத்தருக்கும் தொடர்பு இருப்பதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் ஒருவருக்கும் படுகொலைச் சம்பவத்திற்கும் தொடர்பு இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கந்தேகெதர பியவன்ச என்ற இராணுவ புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தருக்கும் படுகொலைச் சம்பவத்திற்கும் தொடர்பு உள்ளமை தொழில்நுட்ப ரீதியான ஆதாரங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் அறிவித்துள்ளனர்.

லசந்தவிக்ரமதுங்கபடுகொலைச் சம்பவம் குறித்த வழக்கு விசாரணைகளின் போது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். கையடக்கத் தொலைபேசி சிம்கள் தொடர்பில் நடத்தப்படும் விசாரணைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரை விடுதலை செய்தால் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லக் கூடிய அபாயம் காணப்படுவதாக பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, உயர் இராணுவ அதிகாரிகளை இந்தப் படுகொலையுடன் தொடர்புபடுத்துமாறு பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் தம்மை அச்சுறுத்தியதாக சந்தேக நபரான பியவன்ச தெரிவித்திருந்தார்.

உயர் இராணுவ அதிகாரியை தொடர்புபடுத்தினால் தொழில் வாய்ப்பு அளிப்பதாகவும் சலுகைகள் வழங்குவதாகவும் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் தம்மிடம் தெரிவித்ததாக சந்தேக நபர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார். (4-2)

## சொற்பொழிவு

(மருதங்கேணி)

மிருசுவில் வடக்கு மகேஸ்வரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இராமாயணம் என்னும் விடயம் பற்றி சிறப்பு சொற்பொழிவு பண்டிதர் பொன். சுகந்தன் ஆற்றி வருகிறார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை இச்சொற்பொழிவு நடைபெறும். (2-35)

## யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பரீட்சைகள்

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் கலைமாணிப் பட்ட மற்றும் நுண்கலைமாணிப் பட்டப் படிப்பை பயிலும் முதலாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

ஏனைய வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறுமெனவும் மேலதிக விபரங்களை கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாமென்றும் பதிவாளர் அறிவித்துள்ளார். (4-2)

## மக்கள் வங்கியின் பொன்விழா-2011

### பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையின் வாழ்த்து செய்தி



மக்கள் வங்கி இன்று 50 வருடங்கள் பூர்த்தி செய்து இது ஆரம்பிக்கப்பட்ட நோக்கங்கள் பலவற்றை சிறப்பாக நிறைவேற்றி தொடர்ந்தும் வளர்ச்சி பாதையில் முன்னேறிக்கொண்டு இருக்கிறது. யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் மக்கள் வங்கிக்கிளை அமைவதற்கு பங்களித்தவன் என்ற நிலையில் இலங்கையின் செயற்பாடுகள் எனக்குப் பெரு மன நிறைவைத் தருகின்றது.

1961 இற்கு பின்பு இவ்வங்கியால் மாணவர்கள், விவசாயிகள், சிறுவர்த்தகர்க்ள் ஏழைகள், கிராமத்தவர்கள் பெரும் நன்மை பெற்றனர். நலிந்த பிரிவினரின் வாழ்வாதார செயற்பாடுகளுக்கும் மேம்பாடுகளுக்கும் மக்கள்வங்கி நல்ல முறையில் உதவி செய்தது. ஒரு கட்டத்தில் கைமாற்று (அத்மாறு) கடன் திட்டம் மூலம் நாள் கடன் கொடுக்கப்பட்டதால் பல சிறு வர்த்தகர்கள் பெரும் நன்மையடைந்தனர்.

மக்கள் வங்கியின் நகை அடைவு சேவையால் மக்களை அங்கீகாரம் இல்லாத நகை அடைவு பிடிப்பவர்களிடம் இருந்து காப்பாற்றப்ட்டுள்ளனர். இதுபோல் தனியாரிடமிருந்து மிகக்கூடிய வட்டிக்கு (குந்துவெட்டி) பணம் பெறும் நிலை இங்கு மிகவாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் மகளிர் வலுவூட்டலுக்கு சிறப்புக் கணக்குகளும் மற்றும் கடன்வசதிகளும் இவ்வங்கியால் முன்னெடுக்கப்பட்டன.


மக்கள்வங்கியின் செயற்பாடுகள் பல வழிகளிலும் நலிந்த பிரிவினர், சிறுமுயற்சியாளர்களை மையமாகக்கொண்டதாக இருந்தன. இதனால் ஏனைய வங்கிகளும் மக்கள் வங்கியின் செயற்பாடுகளைப் பின்பற்றி வறிய மக்கள் நலன் பெறும் திட்டங்களை அறிமுகம் செய்ய வேண்டியதாயிற்று.

மக்கள்வங்கி கூட்டுறவுத் துறையுடன் மிகவும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது. 1971 இல் இலங்கையில் இருந்த கூட்டுறவு வங்கிகள் யாவும் மக்கள் வங்கியுடன் இணைக்கப்பட்டன. இதனால் யாழ்ப்பாணத்தில் வளர்ச்சி பெற்றிருந்த யாழ்ப்பாணக்கூட்டுறவு வங்கியும் அதன் கிளைகளும் மக்கள் வங்கியுடன் இணைந்தன. சுன்னாகம், நெல்லியடி ,ஆவரங்கால், சாவகச்சேரி, சங்கானை ஆகிய இடங்களில் யாழ்ப்பாணக் கூட்டுறவு வங்கிக் கிளைகள் செயற்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள்வங்கியின் வளர்ச்சிக்கு இப்பிரதேச மக்களின் பங்களிப்பும் முக்கியமானதாக இருந்தது என்பது நினைவிருக்க வேண்டும். இவ்வங்கி மேலும் மேலும் பல புதிய சேவைகளை அறிமுகப்படுத்தி வங்கிச்சேவையில் சர்வதேச புகழ்பெற வேண்டும் என வேண்டுகின்றேன்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
Ph.D(Durham) D.Lit.(Jaffna)
முன்னாள் துணைவேந்தர் /வாழ்நாள் பேராசிரியர்

## செஞ்சொற் செல்வரின் செய்தி



ஏழை மக்களின் பங்காளியாக விளங்கும் மக்கள் வங்கியின் பொன்விழா குறித்து வாழ்த்துவதில் அகமகிழ்கின்றேன். 1961 ஆம் ஆண்டு மக்களின் நலன் கருதி உருவாக்கப்பட்ட மக்கள் வங்கி மக்களுக்காக பல மகத்தான திட்டங்களை உருவாக்கி பணி செய்துள்ளமை பாராட்டுதற்குரியது. எமது சிறுபராய வாழ்வில் மக்கள் வங்கி நடாத்திய தொடர்நாடகம் இலங்கை வானொலியில் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது.

"தணியாத தாகம்" என்ற நாடகம் கிராமிய மக்களை மக்கள் வங்கியோடு இணைத்தது. சில்லையூர் செல்வராஜாவின் கவிதை வரிகளோடுமக்கள் வங்கி ஆற்றிய கலைப்பணியும் மறக்க முடியாதது. பாமரமக்களையும் வங்கித் தொடர்பால் விருத்தி செய்த உன்னத வங்கி மக்கள்வங்கி. பொன்விழாக்கண்ட இவ் வங்கி என்றும் சிறப்புடன் தன் பணி தொடர இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.


பாடுபட்டு உழைப்பவர்க்கே இப்
பாரிடம் சொந்தமையா — கவிமணி

என்ற கூற்றுக்கு அமைய உழைப்பவர்களின் உயிர்நாடியாக மக்கள் வங்கி என்றும் விளங்க வேண்டும் என வேண்டி அமைகிறேன்.

ஆறு திருமுருகன்.
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை,
அதிபர்,
ஸ்கந்தவரோதயாக்கல்லூரி,
சுன்னாகம்.

(சி-3678)



யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினால் யாழ். மாவட்டத்தில் வசிக்கின்ற வேலையற்ற இளைஞர், யுவதிகளின் சுயதொழிலை மேம்படுத்தும் நோக்குடன் ஒவ்வொருவருக்கும் 2 1/2 இலட்சம் ரூபா வீதம் வங்கியின் ஊடாக கடன் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் பயிற்சி வகுப்பு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இளைஞர் சேவை அதிகாரி எஸ். சண்முகவடிவேல் உரையாற்றுவதையும் அருகில் கைத்தொழில் அபிவிருத்திசபை பணிப்பாளர் எஸ். கெங்காதரன்,தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவி இயக்குநர் த.ஈஸ்வரராசா , யாழ்.மாவட்ட நிஸ்கோ பொது முகாமையாளர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட பயனாளிகளையும் படங்களில் காணலாம்.

வெற்றிக்கான பாதை ஒன்றேஒன்றுதான் உள்ளது. அதுதான் நேர்மை வழிப்பாதை. மற்ற பாதைகள், பாதைகளே அல்ல. – ஸரதுஸ்திரர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எங்கள் ஈழத்தின் மோசிகீரனே! மன்னன் கவரி வீசுவான்; சென்றுவருக

ஈழத்தின் தலைசிறந்த தமிழ்ப் பேறறிஞரும் பேராசிரியருமான கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி தமிழ் நெஞ்சங்களை ஆழ்ந்த வேதனையில் மூழ்கடித்துள்ளது.

ஈழத்தமிழர்களின் தமிழ் மொழிக்கான பணி என்ன? அந்தப் பணியைச் செய்தவர்கள் யாவர்? அவர்களின் அறிவுசார் காத்திரம் எத்தன்மையது என யாரேனும் வினவினால், அந்த வினவல் அத்தனைக்கும் நாம் சுட்டிக்காட்டக் கூடியவராக விளங்கியவர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி என்றால் அதில் மிகைப்படுத்தல் எதுவும் இல்லை.

ஈழத்துத் தமிழ்ச் சிறப்பின் அடையாளமாக விளங்கிய அவரின் தமிழுக்கான அர்ப்பணிப்புக்கள் என்பதற்கப்பால், தமிழினத்தின் அவலங்கள், உரிமைப் பிரச்சினைகள் தொடர்பிலும் அவர் ஆழமான கருத்தியலைக் கொண்டிருந்தமை, பேராசிரியர் சிவத்தம்பி என்ற பெயருக்கு உலகளாவிய பெருமையையும், புகழையும் கொடுத்ததெனலாம்.

தமிழ்மொழி ஆராய்ச்சிக்காக–நுண்கலைத் துறையின் வளர்ச்சிக்காக– நாடகப் பாரம்பரியத்தின் எழுச்சிக்காக–ஈழத்தமிழினத்தின் வரலாற்றுக்காக–எங்கள் கிராமங்களின் பண்பாட்டுக் கோலங்களை அடையாளப்படுத்திக் காட்டுவதற்காக பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தன்வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார்.

அவரின் உயிர் பிரியும் வரை தமிழுக்காக வாழ்ந்த அவர், ஈழத்தமிழினத்தின் சால்புமிக்க சான்றோனாக, ஒப்புரவாளராக, ஒழுக்கத்தின் உத்தமராகத் திகழ்ந்தார்.

தமிழ் மொழிக்கான அவரின் அர்ப்பணிப்புகள் ஏராளம் எனப் பட்டியல் இடப்படுகின்ற அதே நேரம், எம் இனம் தொடர்பில் அவர் கொண்டிருந்த நியாயத்துவங்கள், யதார்த்தங்கள், உணர்வுபூர்வமான சிந்தனைகள் வெளிவராமல் போனமைக்கு இலங்கை நாட்டில் இருக்க கூடிய அபாயமான சூழமைவே காரணம் எனலாம்.

இலங்கை நாட்டில் சிங்களவர் தரப்பிலும் தமிழர் தரப்பிலும் கருத்துச் சுதந்திரத்துக்கு இடம்கிடைத்திருக்குமாயின் தமிழ்ச் சான்றோனாகிய பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் சிந்தனைகள் அரசியல் பரப்பிலும், இனப்பிரச்சினைக்கான தீர்விலும் காத்திரமான வகிபங்கை கொண்டிருக்கும் என்பது சர்வநிச்சயம்.

என்ன செய்வது அறிவியலுக்கும் அறிஞர்களுக்கும் இம்மியும் இடம்கொடுக்காத இலங்காபுரியில் சிவத்தம்பி போன்ற மாபெரும் அறிஞர்கள் மௌனமாக இருப்பதையே புத்திசாலித்தனமாகக் கருதியமை தவிர்க்க முடியாததே.

எதுவாயினும், எங்கள் ஈழத்து மோசிகீரனார் பேராசிரியர் சிவத்தம்பிக்கு ஈழத்தில் தமிழ் ஆட்சி புரிந்திருந்தால், நிச்சயம் மன்னன் கவரி வீசியிருப்பான்.

ஓ! நாங்களோ நாடற்றவர்கள்–வீடற்றவர்கள். என்செய்வோம்.

பேராசிரியப் பெருமகனே! தமிழ் மன்னன் வருங்கால் கவரி வீசி உம் தமிழ்ப் பணிக்கு அஞ்சலி செய்வான். அதுவரை இதயம் வெதும்பி உதிரம் கொதித்து கண்ணீர் சொரிந்து விடை தந்தோம். சென்று வருக.

# தேசிய கலை இலக்கிய விழா போட்டி முடிவுகள்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் உடுவில் பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கிய விழா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலரால் வெளியிடப்பட்டுள்ளது. அவை வருமாறு,

**கட்டுரை**

**கனிஷ்ட பிரிவு**

ச.யதுஷா(இணுவில் கந்தசாமி கோவில் இளம் தொண்டர் அறநெறிப் பாடசாலை), க.மோகனஜெனனி (இணுவில் இந்துக் கல்லூரி), வி.ரகன்யா (இணுவில் இந்துக் கல்லூரி)

**கட்டுரையாக்கம்**

**சிரேஷ்ட பிரிவு**

வ.துவாரகன் (இணுவில் இந்துக் கல்லூரி), அ.றணுசியா (ஸ்கந்தவரோதய கல்லூரி, ம.மஞ்சுசா(இணுவில் இந்துக் கல்லூரி)

**சிறுகதையாக்கம்**

**கனிஷ்ட பிரிவு**

வ.சொரூபிகா (இணுவில் இந்துக் கல்லூரி),பா.டிலாஜினி (ஏழாலை சைவ மகாஜன வித்தி), யோ.டோஜிகா (இணுவில் இந்துக் கல்லூரி)

**கவிதையாக்கம்**

**கனிஷ்ட பிரிவு**

சி.கம்ஷாயினி (இணுவில் இந்துக் கல் லூரி), ம.மதுஷா (இணுவில் இந்துக் கல்லூரி), இ.கீர்த்தனி (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி)

**கவிதையாக்கம்**

**சிரேஷ்ட பிரிவு**

ச.யதுசன் (இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் அறநெறிப் பாடசாலை), இ.டெனா(யா/ஏழாலை சைவ மகாஜன வித்தி), சி.றமேஜினி (உடுவில் மான்ஸ் மகா வித்தி)

**கையெழுத்துப்போட்டி**

**கனிஷ்ட பிரிவு**

இ.கீர்த்தனி (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி,அ.கோபிதா (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி, வி.திவாஹரி (இணுவில் கந்தசாமி கோவில் இளந்தொண்டர் அறநெறிப் பாடசாலை)

**கவிதை பாடும் போட்டி**

**கனிஷ்ட பிரிவு**

க.மதிவதனி (இணுவில் கந்தசாமி கோவில் இளந்தொண்டர் அறநெறிப் பாடசாலை), ப.கௌரீசன் (இணுவில் கந்தசாமி கோவில் இளந்தொண்டர் அறநெறிப் பாடசாலை), ஜெ.பிரணவன் (இணுவில்கந்தசாமிகோவில் இளந் தொண் டர் அறநெறிப் பாடசாலை). (தொடரும்)

**பொதுமக்களின் நன்மை கருதி**

# துணுக்காய் அரச, தனியார் காணிகளில் இருந்து இராணுவத்தினர் வெளியேறினர்

(மல்லாவி)

துணுக்காய் நகரப் பகுதியில் பொதுமக்கள் வீடுகளிலும் அரச, அரச சார்பற்ற பொது நிறுவனங்களினது கட்டடங்களிலும் காணிகளிலும் இருந்து வந்த இலங்கை இராணுவத்தின் 653 ஆவது படைப் பிரிவு உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியேறியுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்த மேற்படி வீடுகளின் குடியிருப்பாளர்கள் தமது வீடுகளை சுத்தப்படுத்தி மீள்குடியேறும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை காலமும் துணுக்காய் பிரதேச செயலகம், துணுக்காய் அ.த.க.பாடசாலை, துணுக்காய் பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகம், துணுக்காய் பிரதேச காணி அதிகாரி அலுவலகம் உட்பட பல அரச செயலகங்கள் மேற்படி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இயங்கிக் கொண்டிருந்தன.

தற்போது இப்பிரதேசம் விடுவிக்கப்பட்டமையால் மக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர். (4-15)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### குத்துவிளக்கு ஏற்றுவதன் பலன்

குத்து விளக்கின் தீபம் கிழக்கு முகமாக ஏற்றினால் துன்பம் நீங்கி வசீகரம் உண்டாகும்.

மேற்கு முகமாக ஏற்றினால் கிரக தோஷம் , பங்காளி பகை உண்டாகும்.

வடக்கு முகமாக ஏற்றினால் கல்வி, சுப நிகழ்ச்சிகளுக்கான தடை நீங்கும். பெரும் செல்வம் உண்டாகும்.

தெற்கு முகமாக ஏற்றினால் அபச குணம், பெரும் பாவம் உண்டாகும்.

## வெள்ளி நற்சிந்தனை

27

# செவ்வியல் தமிழில் சீர்மியம்

தனிமையாக வாழ்வது பெருந்துன்பந் தரும். மனிதப் பிறவியை எடுத்தவர் சுற்றம் சூழ வாழ்வு நடத்தவே விரும்புவர். குடும்ப வாழ்வில் குழந்தை குட்டிகளோடு வாழும் நிலையே சிறந்ததென்பர். அந்த வாழ்வை இல்லறம் எனச் சிறப்பித்துக் கூறியுள்ளனர். குடும்ப வாழ்வை ஏற்காமல் மனம் போனபடி இன்பங்களை அனுபவித்து வாழ்பவரும் உலகில் உளர். அதிலும் குறிப்பாக பெண்களோடு காம இன்பத்தை அனுபவிப்பவரும் உளர். இத்தகைய ஒழுக்கங்கெட்ட வாழ்க்கையை மேற்கொண்டவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். அதற்குச் சிறந்த வழி அவர்களை பக்தி நெறியில் ஆற்றுப்படுத்துவதே.

மணிவாசகர் இவ்வுலகில் மந்திரிப் பதவியோடு மதிப்பாக வாழ்வு நடத்தியவர். எனினும் பெண்களோடு காம வாழ்வு நடத்தியவர். அதனை அவர் தனது பாடலிலேயே வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளார். கொவ்வைப் பழத்தை ஒத்த சிவந்த வாயினுடைய மகளிர் என்னும் சுழல் காற்றினால் மனக்கலக்கம் எய்தி காமமாகிய பெரிய சுறாமீனின் வலையில் அகப்பட்டு உய்ய வழியற்றிருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

அந்த வேளையிலே ஐந்தெழுத்து என்ற தெப்பத்தையே பற்றுக்கோடாகக் கிடந்த தன்னை இறைவன் ஆட்கொண்டு கரையேற்றியதை மனம் உருகப் பாடியுள்ளார்.

தப்பமுடியாத பெருந்துன்பத்திலிருந்து விடுபட மாணிக்கவாசகர் கண்ட வழி இது. இறைபக்தியால் காமத்தை வெல்லமுடியுமென அவர் கூறும் வழி அனுபவத்தால் கண்ட நல்ல வழியாகும். 32 வயதுவரை உலகில் வாழ்ந்த அவர் இறைவழிபாட்டால் மனக்கலக்கம் தெளியப் பெற்றவர். அதனால் தன்னைப் போலக் காமவயப்பட்டு மீளவழி தெரியாது கலங்கி நிற்போருக்கு உரிய வழியைப் பாடலிலே கூறியுள்ளார். அவரது பட்டறிவு துன்பப்படும் எல்லோரையும் மீட்கவேண்டுமென விரும்புகிறது. அவரது வாழ்வியல் அனுபவத்தை ஒரு திறந்த புத்தகமாக எல்லோரும் படிக்க வைத்துள்ளார்.

பிறவியாகிய பெருங்கடல் என உலக வாழ்வியலை மணிவாசகர் உருவகம் செய்துள்ளார். காமம் என்னும் உணர்வைப் பெரிய சுறா மீனாக உருவகம் செய்துள்ளார். பெருங்கடலிலே வீழ்ந்தவர் பேரலைகளால் ஏற்றுண்டு பற்றுக்கோடின்றித் தவிக்கும் நிலையை பலரும் உணர்ந்திருப்பர். ஆனால், அதிலிருந்து கரை சேர வழியறியாது தவிப்பர். அத்தகையவர்கள் ஐந்தெழுத்தை ஓதினால் அதுவே தெப்பமாகக் கரை சேர்த்து விடும்.

இறைவழிபாட்டின் பயனை மணிவாசகர் வாழ்வியலோடு இணைத்து விளக்கியுள்ளமை அவருடைய மனப்பக்குவத்தையே காட்டி நிற்கிறது. இறைவன் எம்மை வலிய வந்து ஆட்கொண்டு நல்ல கதியை அருளுவான் என்ற நம்பிக்கையை மணிவாசகர் எல்லோருக்கும் ஊட்டுகிறார். **மூர்க்கனேற்கு முதல் அந்தம் இல்லா மல்லல் கரை காட்டினாய்** என்ற அவரது கூற்று ஒரு உண்மையைக் கூறி நிற்கிறது. இறைவன் நல்லவர்களை மட்டும் ஆட்கொள்வதில்லை. மூர்க்கரையும் ஆட்கொள்ளும் அருள் வடிவானவன். எனவே, அவனை வழிபடுவதே சிறந்த வாழ்வியல் என மணிவாசகர் தவறு செய்தவருக்கு வழிகாட்டுகிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

*தனியனேன் பெரும் பிறவிப்*
*பௌவத் தெவ்வத்*
*தடந்திரையா லெற்றுண்டு*
*பற்றொன் றின்றிக்*
*கனியை நேர் துவர்வாயா*
*ரென்னுங் காலாற்*
*கலக்குண்டு காமவான் சுறவின்*
*வாய்ப்பட்*
*டினியென்னே யுய்யுமா*
*றென்றென் றெண்ணி*
*அஞ்செழுத்தின் புணைபிடித்துக்*
*கிடக்கின்றேனை*
*முனைவனே முதலந்த மில்லா*
*மல்லற்*
*கரைகாட்டி யாட் கொண்டாய்*
*மூர்க்கனேற்கே*

# பாதாள அறைகளில் பிரமிக்கத்தக்க விலைமதிக்க முடியாத பொக்கிஷங்கள்

## நீதிபதி நெகிழ்ச்சி

(கொச்சி)

பத்மநாப சுவாமி கோவில் பாதாள அறைகளை பார்வையிட்டு கணக்கெடுக்கச் சென்றபோது நான் அங்கு பார்த்த காட்சி நம்ப முடியாத அனுபவமாகவும் கனவுலகம் போலவும் இருந்தது என ஓய்வுபெற்ற நீதிபதி சி.எஸ். ராஜன் தெரிவித்தார்.

கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் உலக பிரசித்தி பெற்ற பத்மநாப சுவாமி கோவிலின் பாதாள அறைகளை திறந்து அதில் கணக்கெடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உச்ச நீதிமன்றம் ஏழு பேர் கொண்ட உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அமைத்தது. அக் குழு கோவிலில் 27 ஆம் திகதி முதல் கணக்கெடுக்கும் பணிகளை ஆரம்பித்தது. கோவிலுக்குள் இருந்த ஆறு பாதாள அறைகளில் ஐந்து அறைகளை அக்குழுவினர் திறந்து பார்த்து கணக்கெடுப்பு நடத்தினர். ஆறாவது அறையை திறக்க முடியாமல் போனதால் அவ்வறையை திறப்பது குறித்து இன்று ஆலோசித்து முடி வெடுக்க உள்ளனர். அக்குழுவில் மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவரும் நீதிபதியுமான சி.எஸ். ராஜன் மற்றும் எம்.என். கிருஷ்ணா ஆகியோரும் அடங்குவர்.

தான் பார்த்த காட்சிகள் குறித்து நீதிபதி ராஜன் கூறியதாவது, கோவிலுக்குள் பாதாள அறைகளுக்குச் செல்லும் கதவை திறந்ததும் பார்ப்போரை பிரமிக்க வைக்கும் மிக பெரிய கருங்கற்கள் கொண்டு பாதை மறைக்கப்பட்டிருந்தது. அக்கருங்கற்களை மிகவும் பலசாலிகளான எட்டுப் பேர் கொண்ட குழு மிகவும் பாடுபட்டு அகற்றியது. கீழே உள்ள அறைகள் மிகவும் சிறியதாக இருந்தன.

கீழ் பகுதியில் நான்கைந்து பேர் மட்டும் நிற்பதற்குரிய இடமே இருந்தது. அவ்வறைகளில் தேக்கினாலான நிறையப் பெட்டிகள் ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அப்பெட்டிகளில்தான் தங்கம், வெள்ளி, இரத்தினம் மற்றும் விலை மதிக்க முடியாத பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பார்த்ததும் வியப்படைந்தேன். நம்பமுடியாத மாயாலோகத்தில் இருப்பதைப் போல் உணர்ந்தேன். அங்கிருந்த விலை மதிக்க முடியாத பொக்கிஷங்கள் அனைத்தும் காலம் காலமாக திருவிதாங்கூர் மன்னர் பரம்பரையினர் பத்மநாப சுவாமிக்கு காணிக்கையாக அளித்து வந்துள்ளனர்.

அவற்றில் மன்னர்களது நண்பர்கள், பிற நாட்டு மன்னர்கள் வழங்கிய பொருட்களும் உள்ளன. ஒவ்வொரு முறை மன்னர் கோவிலுக்கு வரும் போதும் ஒரு தங்க நாணயத்தை சுவாமிக்கு காணிக்கையாக வழங்குவது வழக்கம். இவ்வாறு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தங்க நாணயங்களை சுவாதி திருநாள் மன்னர் கோவிலுக்கு காணிக்கையாக வழங்கி உள்ளார்.

இவ்வாறு அங்கு தங்க நாணயங்களே மிகப் பெரிய சேகரிப்பாகக் காணப்பட்டது. அவற்றில் சூரத் நாணயம் என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. பல சரித்திர நூல்களை ஆய்வு செய்தபோது நேபாள மன்னர் குடும்பத்தினர் 100 ஆண்டுகளுக்கு முன் 25 ஆயிரம் சாளாக்கிரம கற்களை திருவிதாங்கூர் மன்னருக்கு வழங்கி உள்ளது தெரிந்தது.

அவை நேபாள தலைநகர் காத்மண்டுவில் இருந்து யானைகள் மீதேற்றி இரண்டரை ஆண்டுகள் கடந்துதான் திருவனந்தபுரத்திற்கு வந்து சேர்ந்தது. அவற்றில் 12 ஆயிரத்து 500 கற்களைக் கொண்டுதான் தற்போது கோவிலில் உள்ள மூலவர் சிலை உருவாக்கப்பட்டது. மீதமுள்ள கற்கள் பாதுகாப்பாக பத்ம தீர்த்தத்தில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிந்தது.

பாதாள அறைகளில் இருந்து கணக்கெடுக்கப்பட்டவை புதையலாக கருத முடியாது. புதயல் என்பதற்கு அரசின் விளக்கத்திலும் அவைகள் இடம்பெறாது அவைகள் அனைத்தும் கோவில் சொத்தாகவே கருத முடியும். மேலும் பாதாள அறைகளில் இருப் பவை குறித்து கணக்கெடுக்க மட்டுமே உச்ச நீதிமன்றம் குழுவை நியமித்துள்ளது. அவற்றின் மதிப்பு குறித்து கணக்கெடுக்க அல்ல என ராஜன் கூறினார்.

(ஸ்ரீ-2)

# யாத்திரை சென்ற ராகுலுடன் கைத்துப்பாக்கியுடன் மர்மநபர்

(லக்னோ)

காங்.பொதுசெயலாளர் ராகுல் சென்ற யாத்திரையின் வழியில் கைத்துப்பாக்கியுடன் வந்த மர்ம நபரால் பரபரப்பு ஏற்பட்டது. இவர் எந்த நோக்கத்துடன் வந்தார் என்பது குறித்து பொலிஸார் அவரை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

உத்தர் பிரதேச மாநில விவசாயிகள் குறைகள் கேட்பதற்காக ராகுல் 3 நாள் பாத யாத்திரை மேற்கொண்டுள்ளார். இம்மாநிலத்தில் விவசாயிகளின் நிலம் அபகரிப்பு மற்றும் இது தொடர்பான போராட்டத்தில் பாதிக்கப்பட்டோரை சந்தித்து ஆறுதல் கூறவும் பிரச்சினைகளை நேரில் கேட்டறியவும் ராகுல் யாத்திரையாக சென்று வருகிறார். இவரது இந்த யாத்திரைக்கு மாநில அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தது.

இந்நிலையில் நேற்று காலை அவர் யாத்திரை செல்லும் வழியில் ஒருநபர் கைத்துப்பாக்கியுடன் ராகுலை பின்தொடர்ந்து வந்தார். இதனை பார்த்த ஸ்பெஷல் பொலிஸ் படையினர் இவரை மல்லுக்கட்டி பிடித்து கையில் இருந்த துப்பாக்கியை பறித்தனர். உதய்ப்பூர் பகுதியை சேர்ந்த இந்த இளைஞர் ஹரிசிஷன்சர்மா (வயது32) என தெரியவந்துள்ளது.

இவர் என்ன காரணத்திற்காக துப்பாக்கியை கொண்டு வந்தார் என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். உ.பி. மாநிலத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளது என்று கூறி வரும் வேளையில் துப்பாக்கியுடன் வந்த மர்மநபரால் மேலும் மாநில அரசுக்கு அவப் பெயர் ஏற்பட்டுள்ளது.

(4-2)

# ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்து பாராளுமன்றில் விசாரணை

(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக கூட்டு குழு நேற்று தன் விசாரணையை ஆரம்பித்தது. மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சகம் 2 ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீடு செய்ததில் ஏற்பட்ட குளறுபடியில் அரசுக்கு ஒரு இலட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என மத்திய தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி பாராளுமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தார்.

இந்த அறிக்கையினால் 14 பேர் இவ்வழக்கு தொடர்பாக் திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்தி வருகிறது.

பா.ஜ.தலைவர் முரளிமனோகர் ஜோஷி தலைமையிலான பொதுக்கணக்கு குழுவும் தன்பங்குக்கு விசாரணை நடத்தி வருகிறது.

ஆனால், இவர் தயாரித்து அளித்த அறிக்கையைக் குழு உறுப்பினர்களே ஏற்கவில்லை. இதற்கிடையே எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கைக்கு இணங்க மத்திய அரசு பி.சி.சாக்கோ தலைமையில் பாராளுமன்ற கூட்டுக்கமிட்டியை அமைத்துள்ளது. இந்தக்குழு இன்று தன்னுடைய விசாரணையை ஆரம்பிக்கின்றது.

கடந்த 98 முதல் 2009 வரை தொலைத்தொடர்புத்துறை செயலர் பொறுப்பு வகித்தவர்களிடம் பாராளுமன்ற கூட்டுக் குழு விசாரணை நடத்த உள்ளது. கடந்த 96 முதல் 98 வரை தொலைத்தொடர்புத்துறை செயலர்களாக இருந்த ஏ.வி.கோகக், வினோத் வைஷ், ஷியா மல்கோஷ், அனில்குமார், ஜெ.எஸ். சர்மா, நிரிபேந்திர மிஸ்ரா ஆகியோரிடம் நேற்றும் இன்றும் விசாரணை நடைபெறுகின்றது.

(4-2)

## பாரதச் செய்திகள்



# தெலுங்கானா விவகாரத்தினால் சாகும் வரை உண்ணாவிரதம்

ஆந்திராவை பிரித்து தனி மாநிலம் அமைக்கக்கோரி நடைபெற்று வரும் போராட்டங்கள் உச்சகட்டத்தை எட்டியுள்ளன. தெலுங்கனாவைச் சேர்ந்த மாணவர்கள் பிரமாண்ட பேரணியை நடத்தும் நிலையில் தெலுங்கானா ராஷ்டிரியா சமிதி தலைவர் சந்திரசேகர ராவ் சாகும் வரை உண்ணாவிரதம் தொடங்கதிட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆந்திர மாநிலத்தை இரண்டாக பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் உருவாக்க வலியுறுத்தி தெலுங்கானா கூட்டு போராட்ட குழு சார்பாக 48 மணி நேர பந்த் அறிவிக்கப்பட்டது.

இதனிடையே தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த தெலுங்கு தேசம் கட்சியினர் தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி ரத யாத்திரை தொடங்கியுள்ளனர். காங்கிரஸ் தெலுங்கு தேசம், பா.ஜ.க ஆகிய கட்சிகள் தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி வருவதால் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி தலைவர் சந்திரசேகர ராவ் புதிய போராட்ட அறிவிப்பை வெளியிட உள்ளார்.

(4-2)

# மத்திய அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார் தயாநிதி

மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.


2ஜி ஸ்பெக்டரம் விவகாரத்தில் மத்திய அமைச்சர் தயாநிதிமாறன் சி.பி.ஐ விசார ணை வலயத்தில் இருப்பதாக உயர் நீதி மன்றில் கூறி உள்ளதை அடுத்து எதிர்க்கட்சிகள் அவரைபதவி விலகுமாறு வலி யுறுத் தி வருகின்றன.

இந்த நிலையில் பிரதமர் வீட்டில் அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இதில் மத்திய ஜவுளித்துறை அமைச்சர் தயாநிதி மாறன் கலந்து கொண்டார்.

பிரதமர் தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில் கலந்து கொண்ட மத்திய அமைச்சர் தயாநிதி மாறனை அமைச்சர் பதவியை இராஜினாமா செய்ய வலியுறுத்தியதாக கூறப்படுகிறது.


இதனையடுத்து அவர் பிரதமர் இல்லத்தில் மன்மோகன்சிங்கை சந்தித்து பதவியை இராஜினாமா செய்தார்.

டில்லி ரேஸ் கோர்ஸ் சாலையில் உள்ள பிரதமர் இல்லத்திற்கு வந்த தயாநிதி மாறன் தனது கடிதத்தை சமர்ப்பித்துவிட்டு அங்கிருந்து உடனடியாகபுறப்பட்டுச் சென்றார். (4-2)




ஆந்திராவில் தனித்தெலுங்கானா விவகாரம் மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில் அப்பகுதியை சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள் ஜனா ரெட்டி, கேசவராவ், லஷ்மணய்யா உள்ளிட்டதலைவர்கள் டில்லியல் நிருபர்களுக்கு கூட்டாக பேட்டி வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# குக், கீஸ்வெட்டர் ஆட்டம் கைகொடுக்க இங்கிலாந்து 10 விக்கெட்டுக்களால் வெற்றி



இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட் , ஒரே ஒரு இருபது-20 , மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது .

இதில் டெஸட் தொடரை இங்கிலாந்தும் , ஒரே ஒரு இருபது-20 போட்டியை இலங்கையும் கைப்பற்றியிருந்தனர் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் முதல் போட்டியில் இங்கிலாந்தும் மற்றைய இரண்டு போட்டிகளிலும் இலங்கையும் வெற்றி பெற்றிருந்தது.

இந்நிலையில் 4 வது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நோட்டிங்காமில் பகல் - இரவு ஆட்டமாக நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 174 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது. ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய அணித்தலைவர் திலகரட்ண டில்ஷான் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். 3வது போட்டியில் சதம் குவித்த தினேஸ் சந்திமாலும் நேற்று 3-வது வரிசை வீரராக களமிறங்கி ஓட்டம் எதுவும் பெறாமல் வெளியேறினார்.

மற்றொரு ஆரம்ப துடுப்பாட்ட வீரரான மஹேல ஜெயவர்த்தன 13 பந்துகளில் 9 ஓட்டங்களை மாத்திரமே பெற்றார். குமார் சங்ககார 75 ஓட்டங்களையும் (7 பவுண்டரிகள் உட்பட) அஞ்சலோ மத்தியூஸ் 39 ஓட்டங்களையும்(2 சிக்சர், 7 பவுண்டரிகள் உட்பட) பெற்றனர்.எனினும் ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததால் 43.4 ஓவர்களில் 174 ஓட்டங்களுக்கு இலங்கை சகல விக்கெட்களையும் இழந்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 25.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது. அலிஸ்டயர்குக் ஆட்டமிழக்காமல் 95 ஓட்டங்களையும்(1சிக்சர், 16 பவுண்டரிகள் உட்பட) கிறேக் கீஸ்வெட்டர் ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களையும்(3 சிக்சர், 8 பவுண்டரிகள் உட்பட) பெற்றனர்.

போட்டியை மழை குறிக்கிட்டதால் டக்வேத் லூயிஸ் முறையில் 10 விக்கெட்களால் இங்கிலாந்து அணி வெற்றியீட்டியது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் தற்போது இரு அணிகளும் 2-2 என்ற விகிதத்தில் சமநிலையில் உள்ளன. இந்நிலையில் தொடரின் வெற்றி தோல்வியை தீர்மானிக்கவுள்ள5-வதுபோட்டி நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

## உலகக்கிண்ண வலைப்பந்து இலங்கையை வீழ்த்தியது ஆஸி

13 வது உலகக் கிண்ண வலைப்பந்தாட்ச் சுற்றுப் போட்டியில் இலங்கை அணி இது வரை விளையாடிய இருபோட்டிகளிலும் தோல்வியடைந்த நிலையில் நேற்று நடைபெற்ற தனது கடைசி லீக் போட்டியிலும் நடப்பு சம்பியனான அவுஸ்திரேலியாவிடம் 20-97 கோல்கள் விகிதத்தில் தோல்வியுற்றது .

இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்தே அவுஸ்திரேலிய அணி ஆதிக்கம் செலுத்தியது. அவ்வணியின் சார்பில் கத்தரின் கோக்ஸ் 27 கோல்களையும் நடேலி மீதர்ஸ்ட் 24 கோல்களையும் எரின்பேல் 14 கோல்களையும் பெற்றனர்.

இலங்கை அணி சார்பில் தர்சினி சிவலிங்கம் 16 கோல்களையும் சஷிகா சமரசிங்க 4கோல்களையும் பெற்றனர்.

குழு ஏ யில் வட அயர்லாந்து, சமோவா, அவுஸ்திரேலியா ஆகிய மூன்று அணிகளுடனான போட்டிகளிலும் தோல்வியுற்ற நிலையில் இத்தொடரிலிருந்து இலங்கை அணி வெளியேறியுள்ளது

எவ்வாறெனினும் இத்தொடரில் ஒரே போட்டியில் 100 கோல்களை குவிக்கும் முதல் அணி என்ற பெருமையை நடப்பு சம்பியனான அவுஸ்திரேலியா நேற்று அடையக்கூடும் என பலர் எதிர்பார்த்தனர் .

எனினும் அதற்கு இலங்கை வீராங்கனைகள் இடமளிக்கவில்லை .உலகதர வரிசையில் அவுஸ்திரேலியா இரண்டாமிடத்திலும் இலங்கை அணி 18 வது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச டென்னிஸ் தரவரிசை: ஜோகோவிச் முதலிடம்

## 175-வது இடத்திற்கு தள்ளப்பட்டார் செரீனா

சர்வதேச டென்னிஸ் தரவரிசையில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 175ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார். அதேசமயம் ஆண்கள் பிரிவில் ஜோகோவிச் முதல்முறையாக நம்பர் வன் இடத்தைப் பெற்றுள்ளார்.

### ஜோகோவிச் முதலிடம்

லண்டனில் நடந்த விம்பிள்டன் திருவிழா முடிவடைந்துள்ளது. இதைத் தொடர்ந்து புதிய தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது.

முதல்முறையாக விம்பிள்டனில் வாகை சூடிய செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஆண்கள் தரவரிசையில் நம்பர் வன் இடத்தைப் பிடித்துள்ளார். செர்பிய வீரர் ஒருவர் நம்பர் வன் இடத்தை ஆக்கிரமிப்பது ஏபிடி தரவரிசை வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். தரவரிசையில் நம்பர் வன் அரியணையில் ஏறிய 25ஆவது வீரர் ஜோகோவிச் ஆவார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் தொடர்ந்து முதலிடத்தில் இருந்த ஸ்பெயினின் ரபெல் நடால் 2ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார். ரபெல் நடால் அல்லது ரோஜர் பெடரர் அல்லாத ஒரு வீரர் முதலிடத்தைப் பிடிப்பது கடந்த 7 1/2 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும்.

### கனவு நனவானது

இதுபற்றி 24 வயதான ஜோகோவிச் கூறுகையில், என்றாவது ஒருநாள் நம்பர் வன் இடத்தைப் பிடிப்பேன் என்று நினைத்தேன். அந்த நம்பிக்கையும் கடின உழைப்பும் இப்போது அந்த உயரிய இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது. நடால், பெடரர் போன்ற பலத்த போட்டியாளர்களுக்கு மத்தியில் நம்பர் வன் இடத்தைப் பிடித்தது வியக்கத்தக்க சாதனையாகக் கருதுகின்றேன் என்றார்.

ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), ஆண்டி முர்ரே (இங்கிலாந்து), ராபின் சோடர்லிங் (சுவீடன்) முறைறே 3, 4, 5-வது இடங்களை வகிக்கிறார்கள்.

### ஷரபோவா முன்னேற்றம்

பெண்கள் ஒற்றையர் தரவரிசையில் முதல் 3 இடங்களில் எந்த மாற்றமும் இல்லை. இதுவரை எந்த கிராண்ட்ஸ்லாம் பட்டமும் வெல்லாத போதிலும் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். பெல்ஜியத்தின் கிம் கிலிஸ்டர்ஸ் 2-வது இடத்திலும் ரஷியாவின் ஸ்வோனரிவா 3-வது இடத்திலும் உள்ளனர்.

விம்பிள்டனில் இறுதிப்போட்டியில் தோல்வியடைந்த ரஷியாவின் மரியா ஷரபோவா ஒரு இடம் முன்னேறி 5-வது இடத்தையும் விம்பிள்டன் சம்பியன் செக் குடியரசின் பெட்ரா கிவிடோவா ஒரு இடம் உயர்ந்து 7-வது இடத்தையும் பிடித்துள்ளனர். விம் பிள்டன் தொடரில் முதல் சுற்றுடன் நடையைக் கட்டிய இந்தியாவின் சானியா 3 இடங்கள் சரிந்து 63ஆவது இடம் வகிக்கிறார்.



ஒற்றையர் பட்டம் வென்ற ஜோகோவிச் மற்றும் கிவிடோவா


### செரீனாவுக்கு அதிர்ச்சி


அமெரிக்க ஜாம்பவான் 29 வயதான செரீனா வில்லியம்ஸ் காயம் மற்றும் உடல் நலக்குறைவு காரணமாக ஓராண்டு ஓய்விற்குப் பிறகு சமீபத்தில் டென்னிஸிற்குத் திரும்பினார். நடப்பு சம்பியனாக விம்பிள்டனில் நுழைந்த அவர் 4-வது சுற்றுடன் வெளியேற்றப்பட்டார். இதன்மூலம் அவர் தரவரிசையில் பெருத்த வீழ்ச்சியைச் சந்தித்திருக்கிறார்.

முன்னாள் நம்பர் வன் வீராங்கனையான செரீனா, விம்பிள்டன் போட்டியின்போது 25-வது இடத்திலிருந்தார். இப்போது 175-வது இடத்திற்குத் தள்ளப்பட்டு இருக்கிறார். 1997-ம் ஆண்டுக்குப் பிறகு அவர் முதல்முறையாக டாப் 150ஐ விட்டு வெளியேற்றப்பட்டுள்ளார்.

### சானியா முன்னேற்றம்

விம்பிள்டனில் பெண்கள் இரட்டையரில் அரையிறுதி வரையும் கலப்பு இரட்டையரில் காலிறுதி வரையும் முன்னேறிய இந்தியாவின் சானியா மிர்சா இரட்டையர் தரவரிசையில் ஏற்றம் கண்டுள்ளார். அவர் 3 இடங்கள் உயர்ந்து 11-வது இடத்தைப் பிடித்திருக்கிறார். இரட்டையரில் அவரது சிறந்த தரநிலை இதுவாகும்.





மண்டைதீவு கிழக்கு கண்ணகை அம்மன் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற குடமுழுக்கு காட்சிகள்.

நகர சபை, யாழ்ப்பாணம்



நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
2013 MECHANIC
சனி
ஞாயிறு } 5 - 6 PM
திரு.செல்வன்
நடைபெறுகின்றது.
(3898)

## ஐ.தே.கவின்...

உறுப்பினர் மைத்திரி குணரத்ன ஐ.தே.கவின் செயற்குழு உறுப்பினர் ரவி கருணாநாயக்கவை அமைப்பாளராக நியமித்ததை ஆட்சேபித்து ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவிற்கு ஜூலை 28ஆம் திகதி பதிலளிக்க வேண்டுமென கங்கொடவில மாவட்ட நீதிபதி சம்பா ஜானகி விஜயரத்தின ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பணித்துள்ளார். (எ-8)

உல்லாசம்
உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO hotels
No.70/6, K.K.S
Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com


## ஜெயலலிதாவை சந்...

படுவதாக இந்தியா எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் கொழும்பிலிருந்து புதுடில்லிக்குத் திரும்பியுள்ளார்.

நான் ஜெயலலிதாவுடன் நல்லுறவைப் பேணி வருகின்றேன். இவ்விடயம் குறித்து முதல் தடவையாக அவருடன் கலந்துரையாடினேன்.

சட்டசபையில் எவ்வாறான தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் இவ்வுறவின் சிக்கல் தன்மை மற்றும் அதைக் கையாள்வதிலுள்ள யதார்த்தங்கள் குறித்து அவர் முழு உணர்வுள்ளவராக உள்ளார் என்று இந்தியப் பிரதமர் கடந்த வாரம் ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## தமிழருக்கான அர...

இது தொடர்பாக ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறுகையில்,

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஆனால் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் காலம் கடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசாங்கத்தின் நாடாளுமன்ற தெரிவுக்குழுவும் இழுத்தடிப்பதற்கான வழிமுறையாகவே அமைகின்றது.

தமிழ் மக்களின்அரசியல் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியும் அதனை உரிய முறையில் பயன்படுத்தாது அரசாங்கம் நழுவும் போக்கிலேயே செயற்படுகின்றது.

எவ்வாறாயினும் சர்வதேச நாடுகளிடம் அரசாங்கம் 13வது திருத்தத்திற்கு அப்பால் சென்று அதிகாரத்துடனான தீர்வுத்திட்டத்தை முன்வைக்க இணங்கியுள்ளது. இந்தியா மேற்படி தீர்வுத்திட்டத்தில் முக்கிய செயற்பாட்டாளராக உள்ளது. ஆனால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எமது அரசாங்கம் வாக்குறுதிகளை காப்பாற்றியதாக வரலாறு இல்லை.

எனவேதான் சர்வதேசத்திற்கு அளித்த வாக்குறுதியை மோசடி செய்து அரசாங்கம் தெரிவுக் குழுவை அமைத்து புதிய தீர்வுத்திட்டத்தை தேடுகின்றது.

வடக்கு கிழக்கு மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டாத அரசு அவர்களுக்கு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கும் என்பதை நம்ப முடியாது. இதுவரை காலமும் பயங்கர வாதத்தில் சிக்குண்டு தவித்த மக்கள் இன்று அடிமைகள் ஆக்கப்பட்டு அச்சத்தில் வாழ்கின்றனர் என்றார். (எ-8)

## சமஷ்டி முறையிலான தீர்...

தெரிவித்ததாவது,

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை பெற்றுக் கொடுக்க இதுவே சிறந்த தருணம். அரசியல் தீர்வு தொடர்பாக நாம் அரசாங்க தரப்புடன் தொடர்ச்சியாக 8 தடவைகள் கூடி பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளோம்.

இந்நிலையில் சமஷ்டி முறையிலான தீர்வை வழங்க அரசாங்கம் இணங்கவில்லையாயின் இறுதித்தீர்வைப் பெற தேவைப்பட்டால் போராட்டங்களை முன்னெடுக்கவும் தயாராக உள்ளோம்.

அரசியல்யாப்பில் மாற்றங்களை கொண்டுவருவதன்மூலமே தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வினை வழங்க முடியும் எனவும் சம்பந்தன் தனது பேச்சில் தெரிவித்தார். (எ-8)

## கே.பி.புனர்வாழ்வு...

வாழும் தமிழ் மக்களுக்கு ஈழம் என்பது வெறும் கனவு மாத்திரமே என்று கே.பி. கூறியுள்ளமையானது அவர் புனர்வாழ்வினை முழுமையாகப் பெற்றுக்கொண்டு விட்டார் என்பதற்குச் சான்று என அமைச்சர் குறிப்பிட்டார்.

கே.பியின் சேவையினை நலன்புரிச் சேவைக் காரணங்களுக்காக அரசு தொடர்ந்து பெற்றுக்கொள்ளும். எனவே கே.பி. அரச தடுப்பில் இருக்கும் அதேவேளை நலன்புரிச் சேவைகளுக்கு அவரை ஈடுபடுத்துவது எவ்வித இடையூறையும் ஏற்படுத்தாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

## தமிழறிஞர் சிவத்தம்பி...

பணியாற்றி பெருமை சேர்த்தவர். எட்டாவது தஞ்சை உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள வந்த பேராசிரியர் சிவதம்பி திருப்பி அனுப்பப்பட்டார் என்ற அநீதிக்கு பரிகாரமாக 2000ஆம் ஆண்டில் தி.மு.க. அரசு அவருக்குதிரு.வி.க. விருதுவழங்கியது.

அண்மையில் கோவையில் நடந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் ஆய்வரங்க குழுவுக்கு தலைமை பொறுப்பு வழங்கி தி.மு.க. அரசு அவரைசிறப்பித்தது. செம்மொழி மாநாட்டில் கலந்துகொள்ள தனது உடல் நிலையையும் பொருட்படுத்தாமல் இலங்கையிலிருந்து பெங்களூர் வரைவிமானத்தில்வந்து அங்கிருந்து கோவைக்குகாரிலேயே வந்துசென்றார்.

மாநாடுமுடிந்துஅவர்விடைபெறும் முன் என் அறைக்கு தேடிவந்து கைகளைப் பிடித்து கண்ணீர் மல்க நன்றி சொன்னார். 70க்கும் மேற்பட்ட நூல்களையும், 200க்கும்மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதி உலக அறிஞர்களால் போற்றப்பட்ட பேராசிரியர் சிவத்தம்பியின் மறைவு தமிழ் உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். சிவத்தம்பிக்கும், அவரை பிரிந்து வருந்தும் துணைவியார் ரூபாவதி சிவத்தம்பிக்கும் அவரது மகள்களுக்கும் குடும்பத்தாருக்கும் எனது ஆறுதலையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்என்றுகருணா நிதி கூறியுள்ளார்.

வைகோ வெளியிட்ட இரங்கல் செய்தியில், ஈழத்தமிழ் அறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பியின் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் மிக்க துயரமும் அடைந்தேன். சிவத்தம்பி சிறந்த விமர்சகர் மேலை நாட்டு விமர்சன முறையை தமிழ் இலக்கியத்தில் அறிமுகம் செய்தவர். தொல்காப்பியத்தை படித்து தமிழ் இலக்கணத்தில் கரைகண்டவர். வரலாற்று ரீதியாக பகுத்தறிவுவிளக்கத்தைக் கொடுத்தவர். விடு தலைப் புலிகளின் ஆதரவாளர் என்றுகூறிதமிழகத்தில் இருந்துவெளியேற்றப்பட்டார்.

இலங்கை சுதந்திரக் கட்சித்தலைவர்களுடன் நெருக்கமாக இருந்த சிவத்தம்பி, நாடாளுமன்றத்தில் சமகால மொழி பெயர்ப்பாளராகப்பணி ஆற்றினார். அவரது மறைவுக்கு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்என்று வைகோ கூறியுள்ளார். (எ-8)

## இதய அஞ்சலி



### திருமதி நாகேஸ்வரி கனகலிங்கம்

எமது வடமராட்சிப் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் பேரன்புத் தோழருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனின் (ரங்கன்) பாசமிகு சகோதரி

**திருமதி நாகேஸ்வரி கனகலிங்கம்**

அவர்கள் கடந்த 6ஆம் திகதியன்று அநுராதபுரம் வைத்தியசாலையில் இறைபதம் எய்தியதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடமராட்சி மக்கள்

அடகு நகை மீட்க அரிய சந்தர்ப்பம்
அடகு வைத்துள்ள உங்கள் நகைகளை இடம் மாற்றி வைப்பதற்கு, கூடிய தொகைக்கு மீள வைப்பதற்கு அல்லது மீட்டு விற்பதற்கு நாங்கள் உதவுவோம்.
(சேவைக் கட்டணம் 2% அறவிடப்படும்)
உடனே அழையுங்கள் CALL NOW 0774050936

Barnabas SALE
247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சிறீதர் தியேட்டர் அருகில்)
தொ.பே : 0777448668
இன் அதிரடி மலிவு விற்பனை


உறுதியான உத்தரவாதம், விற்பனைக்கு பிந்திய அதிவேகமான சேவை.
இச் சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டும்.

CIMA Srilanka Division
அறிவுத் தேடல் வர்த்தகப்பிரிவு சஞ்சிகை
இணைந்து நடாத்தும்
A/L 2011 மாணவர்களுக்கான \ வணிகக்கல்வி / கருத்தரங்கு
பிரபல விரிவுரையாளர்கள் யாழ்,கொழும்பு
பிரபல ஆசிரியர்கள் ஒன்றிணைந்து
ஒரே இடத்தில்
12/07/2011 க்கு முன்னர் பதிவுகளை மேற் கொள்ளவும்
இடம் :-D.C.M
வேம்படி மகளிர் கல்லூரி அருகில்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.